வெளியீடு எண் 332

# திருநாகைக்காரோணத் திருப்பதிகங்கள்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

328

Q23:38.2 1193.N

N54

109648

தருமபுர

வெளியீடு எண் 332

உ

குருபாதம்

# திருநாகைக்காரோணத் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது

எழுதியவர்

தருமபுர ஆதீனத் தேவாரபாடசாலை ஆசிரியர்

**திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள்**

1954

உ

குருபாதம்

# முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவத் தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 21—11—54 ஞாயிற்றுக்கிழமை திருநாகைக்காரோணம் ஸ்ரீ காயாரோகணேசுவர சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப் பதிகம் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப் பெறுகின்றது.

அன்பர்கள் யாவரும் பாராயணஞ்செய்து, பெருமான் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

O23;38·21193·N

N54

உ

குருபாதம்

# தலச்சிறப்பு

இத்தலம் சோழவளநாட்டுக் காவிரித் தென்பால் தலங்களுள் 82ஆவது திருத்தலம். ஆதிசேடன் பூசித்து அருளுற்றமைபற்றி இப்பெயர் எய்தியது. ஆதிபுராணம், சிவராஜதானி எனும் பெயரையும் உடையது. திருமால் பிரமன்முதலிய தேவர்கள், அகத்தியர் வசிட்டர் புண்டரீகர் முதலிய முனிவர்கள், முசுகுந்தர் சாலீசுகர் முதலிய மன்னர்கள், சோளீச்சரமுடையார் முதலிய அந்தணர்கள், தருமன் முதலிய வணிகர்கள், திருஞானசம்பந்தர் முதலிய அடியவர்கள் யாவரும் பூசித்து வழிபட்டு அருளுற அமைந்த சிறப்பினது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று எனத் திகழ்வது. சத்திபீடம் அறுபத்துநான்கனுள் ஒன்றுகி மதுரை, காசி, காஞ்சி இத்தலங்களில் இறையுடன் இருந்து அரசு முத்தி அறம் அளித்திடுகின்ற அன்னையரை இங்கு எல்லாம் அருளிடும் அன்னையராக இருந்தருளத் தாங்கிய விளக்கமிக்குடையது. விசேடம் மிக்க தேவ தீர்த்தம் முனிதீர்த்தம் சர்வதீர்த்தம் முதலிய தீர்த்தங்களைத் தன்னகத்தேகொண்டது. கயிலையோடு காசியை ஒப்ப முத்திமண்டபத்தோடு பஞ்சக்குரோசமும் திகழத் திகழ்ந்திடுவது. கடற்கரையின் அமைந்தது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனுர் பதிகம் நான்கு, சுந்தரமூர்த்தி நாயனுர் பதிகம் ஒன்று ஆய ஏழுதிருப்பதிகங்கள் பெற்ற எழில்மிக்குடையது. அதிபத்த நாயனுர் அவதரித்துப் பணியாற்றி அருளுற்ற தலமும் இதுவே.

## இத்தலத்தின் மறுபெயர்கள்

**ஆதிபுராணம் சிவராஜதானி** (*நா. பு. ப. 5. பாடல். 14, 15)

மார்க்கண்டேயர், கௌதமர், வசிஷ்டர், காசிபர், புலத்தியர், அகத்தியர், ஆங்கிரசர் இவர்களது வேண்டு கோள்பற்றி உலகப்பிரளயகாலத்துக்குப்பின், அநாதி யிலே உலகம் தோன்றி உயிர்கள் உய்ந்திட, இறைவன் இங்கு இலிங்க உருக்கொண்டு தோன்றினன். முன்னின்று வணங்கிய முனிவர் எழுவரையும், சிருட்டிவரை எமக்குப் பின் கீழ்க்குகையுள் அமைந்திடுக என அருளினன். அருளாணைவழி உயிர்கட்கு அருள்புரிதல்வேண்டி, எழு வரும் தவம்கிடந்தனர். தவத்திற்கு இரங்கிய இறைவன் ஆணும் பெண்ணுமாய அருளுருக்கொண்டு கந்தரொடும் காட்சிநல்கினர். (இக் குறிப்பு சம்பந்தர் தலப்பதிகம் குறிஞ்சி 2, 5 பாடலுள்ளும் காண்க.) இதுகேட்ட அயனும் மாலும் இலிங்கத்து அடி நடுவுள் அமர்ந்தனர்; ஏத்தினர். ஈண்டு இவர்கள் ஏத்தியிருந்தமைபற்றி இப்பெயர்களை எய்தியது.

## வழிபட்டோர்

**உமையவள்** (நா. பு. ப. 34.)

இவர் உலகவளம் காண்பான் கருதி சிவபிரானுரோடு இங்குற்றனர். அக்காலை உள்ளத்தெழுந்த விருப்பம் மீதூரப் பார்ப்பதீச்சரம் எனும் (தன்பெயரால்) ஆலயம்

* நாகைப்பட்டினம் தலபுராணம் படலம் எண்ணைக் குறிக்கும்.

ஆக்கி ஈசனைப்பூசித்துத்திகழவந்துறும் உயிர்கட்கு என்றும் மன்னியிருந்து இங்கு அருள்வழங்குதி என வரம்வேண்டிப் பெற்றனர். மகிழ்வோடு மணாளரொடும் இருக்கை சார்ந்தனர்.

முருகன் (நா. பு. ப. 28.)

இவர் சூரபதுமனைக் கொன்று வரும்பொழுது இங்குற்றனர். வேல்கொண்டு ஊன்றித் தீர்த்தம் ஆக்கினர். பராபர இலிங்க உருவினரைக் கண்டனர். வழிபட்டு உயிர்கள் உய்ந்திடவேண்டி இங்குற்றனர்.

திருமால் (நா. பு. ப. 18, 21.)

இவர் அமுதம் பெறவேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த விடவேகத்தால் மேனி கருத்தனர். பொலிவிழந்து வாடினர். நீலகண்டரைவேண்டினர். பின் அருள்வழி இங்குற்றுத் தீர்த்தநீராடி வழிபட்டனர். பெருமான் அருள்பெற்று அருள் உற்றனர். தன்பெயரால் தீர்த்தங்களோடு இலிங்கமும் ஆக்கிப் பூசித்தனர். உகந்த இறைவன், சௌந்தரராஜன் என அருளிய நாமத்தையும் பெற்றனராய்த் திருமகள் மகிழ அழகராகி மகிழ்ந்தனர். இங்குறைவார் தியாகேசரும் இவர் பூசனையில் இருந்தவர்.

பிரமன் (நா. பு. ப. 16, 36.)

இவர் முன்னர் சிருஷ்டித்தொழிலில் திறமைவேண்டினர். திருமாலின் ஆணைவழி இங்குற்றனர். பெருமானை இறைஞ்சிப் பூசித்துவழிபட்டனர். தன்பெயரால் இலிங்கம் தாபித்து (இது நடுவர்கோயில்) பூசனை புரிந்து ஏத்தினர். தனது தொழில், திறம் கைவரப்பெற்று மகிழ்ந்தனர்.

மற்றொருகால் இந்திராதியர்களோடு தவத்தவர் பலர் சூழ நடுவண் இருந்தனர். அதுகாலை அங்குற்ற அரியினை மதியாராகி படைத்தல் தலைவன் யானே முதல்வன் என்றனர். இருவரும் போர்புரிந்தனர். நடுவுற்ற சோதியருள் வடிவினை அடிமுடிதேடினர். கண்டிலர். முதல்வனை உணர்ந்தனர். அதுபோழ்து மறந்துற்ற அரிய வேதங்களை இங்குற்று நீராடி வழிபட்டு உணர்விற்குவந்திடப் பெற்றாராயினர். அருளுற்றுத் தன்நகர் சார்ந்தனர்.

**பிராமி முதலியர்** (நா. பு. ப. 25.)

இவர்கள் சப்தமாதர்கள். இவர்கள் அருள்வேண்டி இங்குற்றுப் பெருமான் உரு அமைத்துப் பூசித்துவழிபட்டு அருளுற்றனர்.

**இந்திரன்** (நா. பு. ப. 13, 21, 41, 45, 49.)

இவன் கௌதமரின் மனைவி அகலிகைபால் காதல் கொண்டனன். காகவடிவுற்று மறைந்துசென்று கரைந்தான். கலந்து இன்புற்றான். உண்மை உணர்ந்த முனிவர் தந்த சாபம் ஏற்றான். வருந்தி அறியாமை எண்ணி அயர்வுற்றான். பின் கண்ணுவ முனிவர் அருள்வழி இங்குற்று நீராடிப் பெருமானை வழிபட்டுக் கருமைநிறம் மாறிடப் பொற்காக்கையாகிக் கண்டவர் வியப்ப மகிழ்வுற்றான். (நீராடிய தீர்த்தம் காகதீர்த்தம்.) பின்னும் வதிந்து வழிபட்டுக் குற்றம் நீங்கிடப் பெற்றானாகி இருக்கை சார்ந்து இந்திராணியொடும் மகிழ்ந்தனன்.

ஓர்கால் நமுசி எனும் அவுணனது சீற்றத்திற்கு ஆளாகி அஞ்சினான். திருமாலின் ஆணைவழி இங்குற்றுப்

பெருமானைப் பணிந்து வழிபட்டனன். இங்கு வழிபாடு செய்துகொண்டிருந்த சாலீசுக மன்னனை அழைத்துச் சென்றனன். நமுசியைக் கொல்வித்தனன். அம்மன்னன் விரும்பியபடி திருமாலிடம் பெற்றுத் தன்பாற் பூசனையில் இருந்த சுந்தரவிடங்கரை அவர் ஆணைபெற்றுவந்த இவருக்குத் தந்தனன், மகிழ்ந்தனன்.

இவன் ஒருகால் சசியோடு இருந்தனன். அதுகாலை தங்கட்கு ஏயசெல்வம் அத்தனையும் என்னால் அன்றோ? என்றனள் சசி. அவ்வாறு கூறினை என்? புவியிற்சென்று மகளாகுதி என்றனன், இந்திரன். நீயும் அவ்வாறே ஆகுதி என்றனள் சசி. இருவரும் ஒருவருக்கொருவர் பெற்ற ஆணைவழிப் பொன்னிநாட்டுப் புண்ணியகீர்த்தியெனும் மறையவற்கு மகன். மகளாகித் தோன்றினர். நாகைநண்ணிப் பெருமானைப் பணிந்து தீர்த்தத்துள் மூழ்கித் தங்களது முன்னையவடிவினை உற்றுப் பொன்னுலகம் புக்கனர். ஒருகால் தரிசனத்திற்காக இங்குற்று வேறுருக்கொண்டு ஆலயத்திருவாயிலுட்புக்கனன். உள்ளே வழிபாடு புரிந்துகொண்டிருந்த உறையூர்ச் சோழன், விசித்திரகவசமன்னனது காவலாளனால் உட்புகமுடியாது தடையுற்றனன். மேல்பாற்சென்று இலிங்கம் ஆக்கித் தீர்த்தம் கண்டு வழிபட்டனன். பெருமான் அம்மன்னனுடன் அங்குக் காட்சிநல்கி வேண்டுவதென் என்றனர். மனிதனால் தடையுண்ட குறைதீர நல்குதி என வேண்டினன். எமக்குப் பேதமிலை வருதி என அருளிய வழி சென்று தரிசித்துத் தன்னுலகம் சார்ந்தான்.

ஒருகால் இவர் குருவாகிய வியாழப்புத்தேளின் அடிபணிந்து முத்திக்கு வித்தாய நலம்பல சாற்றிட வேண்டினன். உளங்கொண்ட குருநாதர் நீற்றுப்பெருமை,

அக்கமணிச் சிறப்பு, ஐந்துபத மான்மியம், அடியார் மாண்பு, பக்தியின் பெருமை ஆயன பகர்ந்தனர். அதனைச் செவிக்கொளுங்காலைப் பராமுகம் செய்து எதிர்நின்றானை விளித்து யாதோ சில பகர்ந்தனன். சீற்றங்கொண்ட ஆசான் அருளியபடி பிரமராக்கதனாகி வருந்தினன். அடி பணிந்து தனது அறியாமையைச் சொல்லி வேண்டினன். அருகில்நின்ற அமைச்சன் உலகம் புரப்போர்க்கு ஈது சொல்லல் பழுது என உரைத்தமையும்கேட்டு அருளினன். பின் அவர் அருளாணைவழி இங்குற்று நீராடிப் பெருமானை வழிபட்டு சாபநீக்கம் பெற்று இருக்கை சார்ந்தனன்.

அக்கினி (நா. பு, ப. 38.)

மதிகுல மன்னன் பிரதீபன் துறவு பூண்டான். அது கண்ட மூத்த புதல்வன் தேவனும், அவ்வண்ணமே ஆயினான். இளையோன் சந்தனு என்பான் தந்தை ஆணையின்றி அரசுரிமையை ஏற்றனன். அதனால் பன்னிரு வருடம் மழையின்றிப் பொருள்கள் சாம்பின. அக்காலம், விசுவாமித்திரர் புரிந்த யாகத்தின்கண் நாய் ஊனினை அவிசாக ஈந்தனர். இவர் அதனை ஏற்றுக்கொண்ட தோஷத்தால் வருந்தி, இங்குற்று மூங்கில்வனம், வன்னி, தீர்த்தம், இவைகளுள், மறைந்திருந்தனர். உணவு கொண்டிடத் தீயின்றித் தேவர் முதலியர் வாடினர். இங்குற்றனர். தேடி இங்குற்ற பிரமனாதியரைக் கண்டு பணிந்து மழைபெய்யச்செய்து, வளமெலாம் மல்கிட அவர்களோடும் பெருமானை வணங்கி வழிபட்டுக் குற்றம் நீங்கித் தன் இருக்கை சார்ந்தனர்.

இயமன் (நா. பு, ப. 17.)

இவன் பூசனையிற்பொருந்திய மார்க்கண்டேயர்மிசை வீசிய பாசம், இறைவன்மீதும் பொருந்தியது. ஆங்கு

சினத்தின் எழுந்த இறைவனது உதையால் உருண்டான். பூசைபுரி அடியரைப் போற்றிடாது, பாசம் வீசிய குற்றத்தால், தனது காய்சினத்தொழிலின் திறல் இலன் ஆயினன். அறியாமைக்கு வருந்தித், தீர்த்தம் பல ஆடி, யமுனுநதி அடைந்தான். ஆங்கு உற்ற நாரதர் அருள்வழி இங்குற்றுப் பெருமானைப் பணிந்தனன். நீயுற்ற மனதினும் கருதிடாத் தீமையின் நீங்கினுய், உன் தொழிலில் வன்மையும் ஈந்தோம் என பெருமான் அருளினர். பெற்று மகிழ்வோடு, தனது உலகம் நண்ணினுன்.

**தேவர்கள்** (நா. பு, ப. 40.)

இவர்கள்; புண்ணியங்கள் அருகித் தீமைகள் மிகுந்த முன்னுள் தோன்றிய விருத்திரன் எனும் அவுணனுல் இடருற்றனர். அஞ்சி, ஓடிப்பணிந்து, குருமொழி தலைக்கொண்டனர். இங்குற்று, ஆதிபுராணனைப் பணிந்து. தேனீக்களாகி மலர்களில், நண்ணினர். தேன் கொணர்ந்து தீர்த்தத்துடன் பொருந்திட ஆக்கி அம்மதுப் புனல்கொண்டு பெருமானுகந்திட ஆட்டி வழிபட்டனர். இந்திரனுல் விருத்திரன் வீந்தமை தெரிந்து மகிழ்ந்து, தங்கள் உலகம் சார்ந்தனர்.

**நந்திநாதன்** (நா. பு. ப. 26.)

இவர் முதலாய கயிலைத்திருவாயிற் காவலர் அறுவர். இக்காவலாம் பாசம் ஒரீஇ பரசுதற்கு நோக்கிலாது, ஈசனை அந்தப்புரத்துத்தொழப்புக்கனர், தூர்வாசர். தொழுதபின் வேண்டிய எல்லாம் பெற்றுப்போயினர். காவல் நன்று முனிவன் சமயமறியாது உற்றனன் உணர்கிலீர், புவியிற் செல்மின் எனப்பணித்தனர் இறைவர். நந்தியாதியோர்

புந்திமாழ்கிச் சிந்தியாத்தீமை கமிஎன இறைஞ்சினர். இரங்கிய இறைஆணைவழி சுந்தரர் விடையருள இங்குற்று சித்தாச்சிரமங்கண்டு இலிங்கம் ஆக்கி வழிபட்டு அருளுற்றனர். குற்றம்நீங்கிட மகிழ்ந்தனர்.

காமதேனு (நா, பு. ப. 31.)

இவர் மழையின்றி உலகெலாம் வருந்தியகாலத்து வருத்தந்தீர நல்கிடும் தானும் ஆற்றலின்றிப் பசியால் வருந்தினர். நாய் ஊன் உண்டனர். பின் கயிலையை அடைந்தனர். நாயூண்கொண்டனை நீயோ? வருதி புலியாகுக என இறைவர் அருளினர். பின் அருள்வழி இங்குற்று வழிபட்டுக் குற்றம் நீங்கிட அருளுற்றுவதிந்தனர்.

தேனுவைக்காணாத விண்ணவர் தேடினர். அதுகாலை வசிட்டர், பெருமானைப் பணிந்து இரந்து இருப்பிடமறிந்து இங்குற்றனர். வெண்ணெய் இலிங்கம் தாபித்து வழிபட்டுக் காமதேனுவை உடன்வரும்படிப் பணித்தருளிடப் பெருமானை வேண்டினர். இறைவன் ஆணைவழி இவரும் அவருடன் விண்ணடேகினர்.

ஆதிசேடன் (நா. பு. ப. 19.)

இவன் மகப்பேறுகுறித்து மனைவியரொடு நாடொறும் நண்ணி காலை, உச்சி, மாலை நேரங்களில் குடந்தை சண்பகவனம், பாம்புரம் வழிபட்டு இங்குற்று அர்த்தயாமப் பூசனையாற்றிடும் நியதியுற்றனர். பயனகக் கருவுற்றிருந்த மனைவியருடன் தன் உலகடைந்தனர். பெண்மகவு ஒன்றினைப் பெற்றனர். அம்மகவு மூன்று தனங்களுடன்

இருப்பதுகண்டு வருந்தினர். ஆங்கு எழுந்த அசரீரி, "நாகநாட கவலற்க! பருவகாலம் நீராடும்கால் புரவலன் ஒருவன் வருவன்; அதுபோது ஒன்று மறைந்திடும். அவனையே மணவாளன் ஆக்குதி" என அருளியமை கேட்டு மனைவியரோடும் மகிழ்ந்தனன். பின்னர் அம்மக வொடும் இங்குற்றனர். பணி பல புரிந்தனர். நாட்கள் பல செல, பின் மகளாரைப் பணிசெய்துகொண்டு இருக் கும்படி விடுத்து ஆவனசெய்து உலகம் சென்றனன். அவரும் பூசனைபுரிந்து இங்கு இருந்தனர். தீர்த்தம் ஆடுங் கால் ஓர்நாள் அசரீரி அருள்வழி சுந்தரமன்னன் ஒருவன் ஆங்கு உற்றனன். தடாதகையொப்பத் தனம் ஒன்று மறைந்தமை உணர்ந்தனள் கன்னிகை. அருளை எண்ணிய வளாகிப் பிலவழியே சென்று தந்தையிடம் அறிவித்தாள். அருளை வியந்து அவனும் மகிழ்ந்தான். இங்கு அவளைச் சந்தித்த சூரியகுல மன்னன் சாலீசுகனும் இவள்பாற் காதல்மீதூர, திருமால் அருளிக் காட்டிய பிலவழிப்புக்கு நாக உலகம் உற்றான். கண்ட சேடன் வரவேற்று மகளாரை மணம் புரிவித்து அரசுரிமையையும் ஈந்து தான் மனைவியரொடும் இங்கு நண்ணித் தன்நாமம் திகழ்ந்திடப் பலகாலம் வழிபட்டிருந்து அருளுற்று முத்தியுற்றனன்.

வாசுகி (நா. பு. ப. 39.)

இவர் இங்குற்று ஆற்றிய பூசனைப்பயனால் சுப்பிரபை, மாலினி, பதுமினி, சாருமண்டனை ஆய நான்கு புத்திரி களைப் பெற்றனர். பருவகாலம்; உரிய மணவாளர்களைத் தெளிந்திலராகி விசனமுற்றனர். ஆங்கு புண்ணியசீலன், தருமசீலன், சுப்பிரதாபன், சத்துருப்பிரதாபன் ஆய சௌராட்டிரவேந்தர்கள் மணம் புரிவர். கவலற்க எனும்

அசரீரி கேட்டு உவந்து தன்னுலகம் புக்குமகிழ்ந்தனன். அதுபோது இறை அருள்வழி பிலவழியே நாகநாட்டுவளம் காண்பான் கருதி அந்த மன்னர்களும் உற்றனர். ஆங் கெழுந்த பெருமான் அசரீரிவழி நாகபுத்திரிகளை அவர்கள் மணம் புணர்ந்தனர். பலகாலம் போகம் துய்த்தனர். அங் கிருந்தனர். பின் அம்மகளிர் நால்வரும் வாழ்க்கையில் வெறுப்புற்றனர். கொழுநரோடும் அண்டபோவனம் சார்ந்தனர். அத்திரி முனிவரின் அருள்வழி இங்குவந்து வழிபட்டுத் தங்கள்பெயரால் ஊர்ப்பெயர் விளங்க வரம் பெற்று (இது நாகூர்) முத்தியுற்றனர்.

புண்டரீகமுனிவர் (நா. பு. ப. 8, 9, 10.)

இவர்; யமுனாதீரத்து வேதபுரம் என்னும் ஊரினர் கற்க கோத்திரத்து அந்தணர். கருத்தமன் ஈன்ற தவப் புதல்வர். முத்தி இன்பம் வேண்டித் தந்தை ஆணைவழி காசியை உற்றனர். எண்ணில் காலம் தவம் கிடந்து கங்கையாடி விசுவநாதர் அன்னபூரணியரை வழிபட்டனர். அருளால் அங்கு உற்ற வாமதேவமுனிவர்; இறப்போர்க்கே இங்கு முத்தி; காஞ்சியிற் செல்க என்று அருளினர். அவரது ஆணைவழி காஞ்சிமாவடி வைகும் கம்பனை நாடி கம்பையில் நீராடிப் பல்காலம் தவம்கிடந்தனர். காரோண மூர்த்தி இலிங்க உருவினைத் தாபித்துப் பூசித்து வழிபட் டனர். அங்கு, அருளால் இங்குறுவது போகம், குடந்தை செல்க என எழுந்த அசரீரி அருளியபடி குடந்தை சார்ந் தனர். இங்கும் தீர்த்தங்கள் ஆடித் தவம்கிடந்து காரோண இலிங்கமூர்த்தியைத் (இது . குடந்தைக் காரோணம்) தாபித்து, வழிபட்டனர். மங்களாம்பிகையைத் தரிசித் தனர். அதுகாலை வந்துற்ற கண்ணுவமுனிவர் ஆணைவழி, இங்குற்று இறைமகிழ் வேடம் தாங்கி ஊன் துறத்தல்,

புலனடக்கம் ஐந்தெழுத்துச் சிந்தனை அடியிணையே சார்ந்த மனம், தவச்செறிவு தீர்த்தங்களின் தோய்வு யாவும் கைவரப் பெற்றாராகி, பல்காலம் தவம்கிடந்து நீராடிக் காலங்கள் தொறும் அன்புமீதூரப் பெருமானைப் பூசித்து வழிபட்டனர். பூசனைக்கு உகந்தஇறைவர்; முன்தோன்றிக் கரங்களால் வாங்கி ஏந்தி, தன்னொடும் பொருந்திட அருள் புரிந்தனர். அவனே தானேயாகி முன்னின்ற முனிவர் இவரும் அவரது காயத்தைத் தழுவியவராகி (காயம் - சரீரம்) யாவரும் காயாரோகணப் பெருமான், என்று இன்றும் போற்றி, உய்ந்திடும்படித் திருவடி சார்ந்தனர்.

**அகத்தியர்** (நா. பு. ப. 15.)

இவர், விந்தமலையின் தருக்கினை அடக்கிப் பொதிய மலைக்கு ஏகுங்கால் இங்குற்றனர். தன்பெயரால் இலிங்கம் ஆக்கி வழிபட்டு அருள் உற்றனர். கடலுள் இருந்து கொண்டு இந்திரனாதியர்கட்கு துன்பம் விளைத்த, அவுணர்களை அழிவுபெறச் செய்து அருள்நல்கினர்.

**பதஞ்சலிமுனிவர், வியாக்கிரபாதமுனிவர்** (நா. பு. ப. 21.)

இவர்கள் இங்குற்றுத் தியாகேசரைப் பணிந்தனர். பஞ்சாக்கர நடனம் காணவேண்டினர். கண்டு தரிசித்து இன்புற்றனர்.

**பராசரர்** (நா. பு. ப. 24.)

இவர் இறைவன் இணையடிகளை எக்காலத்தும் மறவாது உளங்கொண்ட சிந்தையர். அருளை மேலும் வேண்டினர் இங்குற்று இலிங்கம் தாபித்து நீராடி வழி

பட்டனர். பலகாலம் சிவயோகத்தமர்ந்தனர். இறைவன் தோன்றி முன்னின்றருள ஈறிலா ஆனந்த இன்பவடிவ முற்றனர்.

வசிட்டர் (நா. பு. ப. 31.)

இவர் இங்குற்றுப் பூசனைபுரிந்து தங்கியிருந்த காம தேனுவை விண்ணுலகிற்கு மீண்டும் அழைத்துச் செல்ல வேண்டிக் கயிலையிற் பெருமானை வணங்கி விடைபெற்று இங்குற்றுப் பெருமானைப் பணிந்து வழிபட்டு, ஆணை பெற்று தேனுவிடம் தெரிவித்தனர். தேனுவும் விடை பெற்று வந்திட உடன் அழைத்து ஏகினர்.

வாமதேவமுனிவர் (நா. பு. ப. 29.)

இவர் உச்சயினிமாகாளத்தின்கண் கோயில்கொண் டுள்ள மாகாளநாதனைப் பணிந்திடும் நியதியர். தவம், குணம், கலைஉணர்வு நிறைந்த தூயஅறிவினர். அக்கு மணியோடு நீறணிந்த அருள்வேடத்தர், மறைப்பொருள் ஐந்தெழுத்து எனும் அருள்வடிவினர். ஒருநாள் தன்னை வணங்கிய தீராப்பிணியாளன்; 16 வயதே உடையான் தனதத்தனுக்கு தீராப்பிணியைத் தீர்ந்திடவும் ஆயுள் நூறு உற்றிடவும் யமனுலகு சென்று மீண்டிடவும், அருளிய தவச்சிரேட்டர். இங்குற்றுப் பலகாலம் வழி பட்டுத் தவமிருந்து முத்தியுற்றனர்.

கோசிகன் (நா. பு. ப. 32.)

இவர் முனிவர். திரேதாயுகத்தில் கடற்கரை உற்றுக் கடுந்தவம் மேற்கொண்டு பலகாலம் பொருந்தினர். அங்கு இந்திரன் ஆணைவழி வந்துற்ற திலோத்தமையை மோகித்து

புணர்ந்தனர். தவம் அழிதர வருந்தினர். ஏமமாமுனிவர் அருள்வழி இங்குற்று, நீராடி இலிங்கம் நிறுவிப் பூசித்து வணங்கினர். தவம் கைவரப்பெற்றனர்.

முனிவர் எழுவர் (நா. பு. ப. 25.)

வசிட்டர் முதலாய முனிவர் எழுவர் இவர். ஞானம் கைவரப்பெறுதல் கருதி இங்குற்றனர். இலிங்கப்பிர திட்டை செய்து வழிபட்டு அருளுற்றுச் சித்தியெய்தினர்.

கார்த்தியாயனர் (நா. பு. ப. 33.)

இவர் சித்திகள் பலவும் வேண்டினர். அகத்தியரைப் பணிந்தனர். அவர் ஆணைவழி இங்குற்றனர். நீராடிப் பெருமானை வழிபட்டனர். வேண்டிய வரங்களெல்லாம் உற்றனர். தன் இருப்பிடம் சார்ந்து இன்புற்றனர்.

பரசுராமர் (நா. பு. ப. 20.)

இவர்: பிருகு முனிவர் ஆணைவழி சமதக்கினி முனிவர், ரேணுகை இவர்கட்குப் புதல்வராய்த் தோன்றினர். ஓர் நாள் நீராடச்சென்ற, இவர் அன்னை ரேணுகாதேவி கார்த்த வீர்ய மன்னனின் அழகினை, நீரினுட்கண்டு நிறைமை நீத்தனள். கோபமுற்ற தந்தை ஆணைவழி தாயரை மாய்த்தனர். தாயரை ஆணை ஈந்து மாய்த்த ஜமதக்கினி யைக் கோபமுற்ற அம்மன்னன் கொன்றனன். அவன்பாற் சினங்கொண்ட இவர் இங்குற்றனர். விருத்த காவிரியில், நீராடினர். இலிங்கப் பிரதிட்டைபுரிந்து பூசனையாற்றினர். அதுபோது தீர்த்த நீரினுள் தோன்றிய கார்முகம் கண்டனர். (விற்படை) கண்ணுதற் பெருமானும்

முன்னின்றனர். தரிசித்து அடிபணிந்தனர். அருளூற்றுத் தாயரைக் கொன்ற பாவம் நீங்கினர். அருள்வழி, தலைமேற் கொண்டு, கார்முகப் படையேந்திச், சென்று. காத்த வீரியனை மாய்த்தனர். (இந்தக் கார்முகதீர்த்தமும் இலிங்கமும் இங்குளது) அழியாப்புகழுற்றனர்.

**கதம்பமாமுனிவர்.** (நா. பு. ப. 28.)

இவர் இங்குற்று இலிங்கவடிவு ஆக்கிப் பூசித்தனர். பஞ்சக்குரோச, வலம் உற்றனர், எண்ணிய எலாம், கைவரப்பெற்று அளவிலா இன்புற்றனர்.

**நவகோடிசித்தர்கள்** (நா. பு. ப. 27.)

இவர்கள் கருமயோகம் நிறைவுற்றவர்கள். பிரமனை அணுகி, சிவஞானம் கைவரப்பெறுதற்கு, உபாயம் வேண்டினர். அவர் ஆணைவழி இங்குற்று, நந்திநாதரைப், பணிந்தனர். ஆலடியில் இருந்து, தவம்புரிந்தனர். சத்தி பதிதர, உள்ளங் கொண்டனர். எதிர் தோன்றி அருளிய, நந்தி அருள்பெற்று, ஒழியாத சிந்தனையுற்று, முத்தியின் நண்ணினர்.

**நைமிசமுனிவர்.** (நா. பு. ப. 61.)

இவர்கள் சூதகாதி முனிவர்கள். இங்குற்றுத் தரிசித்து தங்கள் இடம், சார்ந்து இன்புற்றனர்.

**சாலிசுகன்** (நா. பு. ப. 19, 30.)

இவர் சூரியகுல மன்னருள் ஒருவர், சுந்தரவடிவினர்: இறைவன் இணையடிமறவாத சீலர். ஓர்கால் அருள்வழி,

இங்கு தீர்த்தமாடிட, உற்றனர். ஆங்கு நீராடிய, ஆதி சேடன் மகள் நாககன்னிகையைக் கண்டனர். திருமால் காட்டிய பிலவழியால், நாகலோகம் உற்றனர். இறையருள் வழி, அக்கன்னிகையை, மணந்தனர். இங்குற்று மனைவியரொடும் இறைபணி புரிந்தனர். விழாஎடுத்தனர், பூசித்தனர், ஓர்கால்இந்திரன், வேண்டுகோட்கிணங்கி, விண்ணுலகம் சென்று, நமுசி யெனும், அவுணனைக் கொன்றனர். இந்திரனது பூசனையில், வைகிய சுந்தர விடங்கரைப், (தியாகேசர்) பெற்றுவந்து இங்கு தாபித்துப் பூசனைபுரிந்து மகிழ்ந்தனர். பலகாலம் வைகி, மனைவியரோடும் பணிபல புரிந்து, வழிபட்டு சிவபோகம் உறறனர்.

**இராமர்.** (நா. பு. ப. 23.)

இவர் சீதையைத் தேடிவந்தவர். இலங்கை செல்வழி இங்குற்றனர். கடலில் நீராடினர்: இலிங்க உருவாக்கிப் பூசித்தனர். கடலில் அணையிடுவதற்கு அருள்புரிதலை வேண்டினர். பெருமான் அருள்தரப்பெற்றனர், இலங்கை புக்கு' இராவணனை அழித்துச். சீதையொடு மீண்டும் இங்குற்றுப், பூசித்து வழிபட்டு அயோத்தி சார்ந்தனர்.

**தசரதர்.** (நா. பு. ப. 22.)

இவர் அயோத்தி மன்னர். சூரியகுலத்தவர், இராமரின் தந்தை. சோதிடநூல் வல்லார்களால், கோள்களின் வக்ரநிலைமைபற்றிப் பன்னிரண்டு ஆண்டுகட்கு மழையில்லை என்பது அறிந்தனர். சூரியன்பால் வேண்டி இங்குற்றுப் பெருமானை வழிபட்டு, சனிப்பிரதிட்டை புரிந்து துன்ப நீக்கப்பெற்று. அயோத்தி சார்ந்தனர்,

**முசுகுந்தர்.** (நா. பு. ப. 35.)

பரிதிகுலமன்னர் மண்களிகூர்தரப், புரந்திடும் வள்ளல், இவர் ஓர்கால். வேட்டையாடித் திரும்புகாலை, தனது நகர் சார்ந்திடுவான் கருதி, தனது குதிரையை விரைந்திடத் தூண்டினர். குதிரை விரைவுற்றது, செல்லும் வழியிற் கிடந்த அந்தணன், குதிரையின் காலில் மிதிப்புண்டு இறந்ததை அறிகிலர். அரண்மனை சாருமுன், அவனது ஆவி, பிரமகத்தியாகிப் பற்றியது. அதிர்த்தல், சிரித்தல், மங்கையை விதிர்த்தல், போரிடல், சுழலுதல், எறிதல், ஏற்றல், எயிறுகள் கறித்தல், மேல் விழுதலாதி, செயல்களில், மலிந்தனர். வருந்தினர். அமைச்சர்களால், மூலகாரணம், உணர்ந்து. வசிட்டரை அணுகிப் பணிந்தனர். அவர் ஆணைவழி இங்குற்றனர். பெருமானை நண்ணினர். கண்களிகூர்தரக் கண்டனர். பண்களிகூர்தரப் பாடினர். எண்களிகூர்தர இன்பமார்ந்தனர். வழிபட்டுப் பழிநீங்கிடப் பெற்றாராகி, நகரம் சார்ந்தனர்.

**அரசகேசரி தனதத்தன்** (நா. பு. ப. 29.)

அரசகேசரி இவர். அரசர். உயர்வளத்தால் ஓங்கிச் சிறந்தது உச்சயினிமாகாளம். ஆங்குறைவோன் நாய்கர் குலத்தவன் விண்டுதத்தன். அவன்பெற்ற தவப்புதல்வன் தனதத்தன் என்பான். அவன் பிணியால் மெலிந்தான். மணி மந்த்ர அவுடாதிகளால் நோய் தவீர்ந்திலது. அறவோர் அருள்வழித் தெய்வம்பேணுவானாகித் தந்தையை பணிந்து, மாகாளநாதனை நாள்தொறும் தொழுது வழிபட்டனன். ஒருநாள் நல்விதியால் அங்குற்ற வாமதேவ முனிவரைப் பணிந்தனன். நோயால் மெலிந்தேன்;

சோதிடர் ஆயுள் பதினறெனப் பகர்ந்தனர். என்செய் வேன் என இரங்கினர். ஆயுள் நூறு பெற்றிடுதி. எழுந் திரீர் என்றனர் முனிவர். எங்ஙனம் அஃதுறுவது என் றனன் தனதத்தன்.

நீ சோதிடர் கூறியபடி பதினறில் இறந்து காலன் ஊர்புக்கு, மீண்டும் இங்குவந்து நூருண்டுவாழுதி என அருளினர். அருள்வழியே யமன் உலகுபுக்கு இயமனல் போற்றப்பெற்று, நரகங்கள் கண்ணுற்று, இயமன் அருளியபடி ஞானம் கைவரப்பெறுதற்கு உபாயம் நாகை சார்தலே என்பதும் உணர்ந்தானகி மீண்டும் தன்னூர் சார்ந்தனன். தந்தையைப் பணிந்தனன்; பழைமையே போல் நோயிலா ஆக்கையனுய் எதிர்நின்ற மைந்தனைத் தழுவி நடந்தமை கேட்டு மகிழ்ந்தான் தந்தை. விண்டுதத் தன்பால் கேள்வியுற்ற அரசகேசரி இவர் இவ்விஷயம் உணர்ந்தனர். அத்தனதத்தனேடு இங்குற்றனர். பெரு மானைப்பணிந்து பணிகள் பலபெருக்கி நாகமாநகரம் வதிந் தனர்; செங்கோல் ஓச்சினர். ஆனித்திங்களில் பஞ்சக் குரோசம் சூழ்ந்துவந்து பணிந்து அத்தனதத்தனேடு முத்தி யுற்றனர்.

**பாண்டியன்** (நா. பு. ப. 37.)

இவன் மதுரையை ஆண்ட வீரபாண்டியமன்னன். கானகம்நண்ணி வேட்டையாடினன். விலங்கினைக் குறி வைத்து எய்த அம்பு ஒன்று பட்டு, ஆங்குத் தவமிருந்த காலவமுனிவரின் கையறுப்புண்டது. அவரது சீற்றத்தால் சாபமேற்று கயரோகமுற்றனன். வருந்தினன் அறியாமை பொறுத்தருள்க என இறைஞ்சினன். பின் அவர் ஆணைவழி இங்குற்று காரோணரைப் பணிந்து சாபநீக்கம் உற்றனன். தன்நகர்சார்ந்து மகிழ்ந்தனன்.

பத்திரசேனன் (நா. பு. ப. 54.)

மன்னர் இவர். மரைமலர்கொண்டு மாதேவன் தாளிணைகளை நாள்தொறும்பூசித்திடும் நியதியள். ஒழுக்கம் மிக்காள்; பதுமினி எனும் பெயராள். அரசி அவரொடும் காஞ்சியின்மன்னி செங்கோலோச்சி வாழ்ந்தனர். வாழும் நாளில் மனம் புழுங்கிய அரசர் பலர் போர்புரிந்திடல் கருதிப் படையொடும் வந்துற்றனர். அறைகூவி வளைந் தனர். அஞ்சிய இவர் மாவடிவைகும் அண்ணலின் பூவடி வணங்கி வேண்டினர். அங்கு அருளிய இறைவன் அருள் வழி மனைவியரொடும் இங்குற்றனர். தீர்த்தம் படிந்து நீலமலர்க்கண் அன்னை அடிபணிந்தனர். ஆங்கு சிவன் இரா அணியதாகிட யாமம் நான்கிலும் மஞ்சனமாட்டி வழிபட்டேத்தினர். மாற்றார் பகைமை நீங்கி நட்பாவார் என அருளிடப்பெற்றனர். ஆண்டுதொறும் அணைந்து இவ் இரவினிற் பூசைபுரிதி. பின் முத்தி உறுதி என இறைவன் அருளினன். பெற்று மகிழ்ந்தாராகிக் காஞ்சி யேகினர். மாற்றாரும் அருளுற்ற இவர்பாற் பகைமை கொளற்கஞ்சி ஏகினர். பின் பலகாலம் அருள்வழி செங்கோலோச்சியிருந்து முத்தியின்புற்றனர்.

நிருகன் (நா. பு. ப. 52.)

உலகாள் மன்னரில் இவன் ஒருவன். மகப்பேறு குறித்துத் தானங்கள் பல ஈந்தனன்; தீர்த்தங்கள் பல ஆடினன். என்செய்தும் மனைவயிற்று நினைந்தவாறு தோற்றம் கண்டிலன். கானகம்புக்குத் தீவளர்த்து நடுவுள் இருந்து கடுந்தவம் ஆற்றினன். அங்கு உணர்த்திய அசரீரி வழி இங்குற்றான். தீர்த்தம் பல ஆடித் தலங்கள் பல பணிந்தான். உம்பரும் உள்ளுதற்கரிய தீர்த்தத்துள்

அமைந்து, பலகாலம் கடுந்தவம் பொருந்தினன். பிறையணி சடைப்பிரான்: எண்ணிய பலன் அவன் அடைதரப் பாலித்தான். உளமகிழ்ந்து பணிகள் பல ஆற்றித் தன் பதிமேவி, மைந்தனைப்பெற்று மனம் மகிழ்ந்தான். பிற்றை நாள் அவர்க்குச் செங்கோல் ஈந்து கடையருச்சிவபுரம் கண்டு இன்புற்றான்.

சயதுங்கன் (நா. பு. ப. 47.)

இவன் கலிங்கநாட்டு மன்னன். கானகம் புகுந்து வேட்டையாடிக் களைத்தனன். பசியால் மிக வருந்தினன். அண்மையில் திகழ்ந்த மரீசிமுனிவரின் பூசனைக்குரிய பழத் தோட்டத்துள் தனது படையொடும் நுழைந்தான். ஆங்கு திகழ் கனிகள் அனைத்தையும் களைதீர உண்டான்; இருந்தான். அதுகாலை நீராடிப் பூசனைக்குப் புகுந்த முனிவர் இறைவருக்கு ஆசையோடு அமைத்திடப், பழங் களைக் கண்டிலர். ஏவலரால் விஷயம் அறிந்தனர். கையறக்குறைந்திடப் "பிச்சையேற்றுத் திரிக" எனச் சபித்தனர். சாபமேற்றுக் கிலேசத்துள் மூழ்கிய மன்னன் முனிவரன்தாளைப் பணிந்தனன். பிழை பொறுத்தருள வேண்டினன். இரங்கிய முனிவர், ஆண்டநாயகருக்கு ஆகும் கனிகளைக் கவர்ந்தனை; சாபமேற்றனை. நைய வேண்டாம். "நாகை சென்று தீர்த்தம் ஆடுக; அது போது குறைந்தகைகள் வளர்ந்துறும். வளர்ந்த கைகளாற் பூசனை புரிதி. வறுமை நீங்கி அரசுரிமை ஏற்றுத் திகழுதி. பின் முத்தியும் எய்துவை" என அருளினர். அருள்வழி இங்குற்று நீராடிப் பூசித்து அரசுரிமைபெற்றுப் பணிகள் பல புரிந்தனன், பிற்றைநாள் முத்தி இன்பம் எய்தினன்.

விரோதன் (நா. பு. ப. 46.)

இவன் மானர்த்ததேச மன்னன் மதிக்குலவன். வேட்டைகுறித்துக் கானகம்நண்ணிக் கன்றுக்குப் பால் ஈந்துகொண்டிருந்த மான்பிணை ஒன்றில் அம்புகொண்டு எய்தனன். விட்டகணையால் நடுங்கிய மான் குட்டநோ யுறுக எனச் சபித்தது. சாபமேற்று வருந்தினன். பின் சதானந்தர் அருள்வழி இங்குற்றுக் காரோணம் போற்றிச் சாபம் நீங்கினன். நீறணிந்து பிரமன் மால் காணுப் பெரியோன் அருள்பெற்றுத் தன்நகரம் சார்ந்து வாழ்ந் திருந்தான்.

விசித்திரகவஜன் (நா. பு. ப. 45.)

உறையூரை ஆண்ட அரசருள் ஒருவன் இவன். கலை பல தெரிந்தோன். சிவனடிமறவாச் சிந்தையன். அமைச்சர் சூழ ஆங்கிருந்து அறச்செங்கோலோச்சிடும் செல்வன். பலப்பல தலப்பெருமைகளை புலமையாளர்பாற் கேட்டு உவந்திடும் நியதியன். ஓர்நாள், இன்று இந்திரன் வந்து நிறைபணியாற்றும் நாள்; நாகைக்காரோணத்து அதனை யேற்றுமகிழ்வன் இறைவன். எனத் தெரித்தமைகேட்டு உள்ளத்தன்பு மீதூர உவந்தனன். பந்தம் நீங்கினன். வீடுபாலித்திடும் இங்கு, சுற்றத்தொடும் உற்றனன். கற்றவர் பயிலும் கடல்நாகைக்காரோணத்தை இறைஞ்சி னன். உற்றதீர்த்தங்கள் ஆடினன். நீறணிந்தான் அக்க மணிகள் புனைந்தனன். எழுத்து ஐந்தெண்ணினன். அட்டாங்கபஞ்சாங்கம் உறப்பணிந்து இறைவன்முன் புக்கனன். கண்ணீர்வாரநின்றனன். நின்றுன். அதுகாலை தான் பூசனைபுரிகாலம். ஆதலின் ஆங்குற்றுன் இந்திரன். உட்சென்றுற்ற அரசனது காவலனுல் வேற்றுருக்கொண்டு

ஆலயத்துட் புகுந்திடுபோது தடையுண்டான். உள்ளம் அஞ்சினன்போல் அகன்றனன். (ஏனையன இவ்வரலாறு பற்றி இந்திரன் வரலாற்றிற் காண்க.) இறைவன் அரசனுக்கு இதனை அருளி அவன் வேறு உரு தாபித்து அருச்சித்திடும். ஆங்கு செல்வோம் என அவரொடும் உற்றனன். அதனையும் கண்டுவந்தனன். பின்னர் இறைவனது ஆடல்கண்டு இன்புற்றனாய் பணிகள் பல புரிந்துப் பன்னாள் வதிந்தான். இறையருள் பெற்றுத் தன்நகர் சார்ந்து வாழ்ந்தான். பின் இறை இணையடி நீழல் உற்றான்.

நரபாகன் (நா. பு. ப, 42.)

இவன் மதிகுலமன்னன். போரில் வெற்றிகொள எண்ணி நாடுகள் பலவற்றிலும் போர்தொடுத்தான். தன் நாடுகளை அச்சம் மேவிட இழந்தான். இனி இறையமர் தானம் பல தொழுவேன் என்றெழுந்தான். பருப்பதம் முதலாப் பதிகள் பல பணிந்து இங்குற்றான். இறைவனைப் பணிந்தான். அருளுற்றான். இறைவன் ஒன்னலர் இரிந்திடவும், நாடுகளைப் பெற்றிடவும் அருளினன். பெற்ற அதனையெலாம் உன்னையினும் பெறு செல்வம் யாதுளது? ஆதிபுராண அன்னையொப்பாய் நீயே என்றுகூறி அவருக்கே ஆக்கி அவனே தானேயாயினன். வாழ்ந்தனன்.

சோளீச்சரமுடையார் (நா. பு. ப. 60.)

இவர் மறையவர் குலத்தவர். வேதங்களையெலாம் உணர்ந்த வித்தகர். தவத்தவர். முத்தியின்பம் பெறுவான் கருதினர். காசிப்பதி உற்றனர். ஆங்கு இராமதேவர் என்பார் ஒரு தவச்சிரேட்டர். சட்டைநாதப்பெருமானை வழிபட்டு ஞானம் கைவரப்பெற்றாராகி மேலாம் நிலையுற்றனர். உற்றிருந்தும் தானாக்கிய அப்பெருமாற்குரிய

கிரியையாதி பூசனையில் வெறுப்பிலராகிப் பூசித்து உறைந்திருந்தனர். அவர்பால் நண்ணிப் பணிந்தனர். தனது விருப்பம் பூர்த்தியுறும்படி உபாயம் அருளல்வேண்டும் என இரந்தனர். அவரும் மனம் உவந்தாராகி அதனையெலாம் அருள்பவரும், எமக்கு அருளியவரும் இந்தப் பயிரவமூர்த்தியே என்று தன்னிடம் பூசனையில் இருந்த சட்டைநாதரைத் தந்தருளினர். மகிழ்ச்சியோடு பெற்று அவரைப் பூசனைப்புரிந்து அத்தலத்துறைந்தனர்.

ஓர்நாள் இரவு கனவில் தோன்றியருளிய சட்டைநாதர் உத்திரவுப்படி அச்சட்டைநாதப் பெருமானைத் தலையிற் சுமந்தாராகி இத்தலத்தைநோக்கி வந்தனர். வரும் வழியில் உள்ள சோமநாதம், ஆலங்காடு, காஞ்சி, தில்லை, ஆரூர் ஆய தலங்களையெலாம் தரிசித்து இங்குற்றனர். தீர்த்தங்கள் ஆடிக் காரோணரை வழிபட்டனர். மேல்பாற் சென்று உற்றனர். பெருமானைப் பிரதிட்டை புரிவதற்கு பொருளிலராய்த் தளர்வுற்றனர். அன்றிரவு கனவின்கண் சட்டைப்பெருமான் தோன்றி "கவலற்க; அருகுறையும் அரசன் திருமலைராயன் மகள் பிரமராக்கதம் பிடித்துத் துன்புறுகின்றனள். ஆங்கு செல்குதி; அது விலகிடும். அரசன் மகிழ்ந்து ஆவனசெய்வன்" என அருளினர். அருள்வழி அரசன்முன் உற்றனர். பிரமராக்கதம் வந்து அடிபணிந்திட, அதனை விலங்கிட்டுத் தாம் சமாதிபயிவிடத்தின் மேல்பால் இருத்தினர். அரசன் மகிழ்ந்தான். இவர் விருப்பத்தின்படி தென்பால் ஆலயம் அமைத்தனன். சட்டைநாதரைப் பிரதிட்டைசெய்தான். விழாவெடுத்தான். சோளீச்சரமுடையார் மகிழ்ந்தனர். அரசருக்கும் ஆசிநல்கினர். பல்காலம் பூசித்திருந்து அபிமுகத்து சமாதியுற்று உயர்முத்தி இன்பமுற்றனர்.

No.
109648

**சண்டதருமன்** (நா. பு. ப. 53.)

இவர் அந்தணர்குலத்தவர். மறைமுதற்கலை உணர்வு, நிறைதவம், ஒழுக்கம், நீதி யாவும் கைவரப்பெற்றவர். முறைமையிற்றிறம்பல் இலாதவர். இல்லறத்தவர் ஆயினும் முன்னை வினைவசத்தால் காமவேட்கை மிக்குளராயினர். பரமாதர்கள் பலர்களின் விழைவுமிக்குற்றார். ஓர்கால் வேனிற்காலத்துப் பரமாதொருத்தியோடு கலந்திருந்தனர். பின் தாகவிடாய் தவிர்த்திடுவான் விரும்பி மோருளதாயின் கொணர்க என்றனர். கேட்ட பரத்தையர் கள்ளினைத் தந்தனர். விடாநசையால் அறியாதுண்டனர். பின் அருந்தியது கள்ளென உணர்ந்து சினந்தனர். அவளை நீங்கி வெளியுற்றனர். கலையுணர்ந்த அருமறை முதியோர் பாற் பணிந்து, உற்றது கூறினர். நெய்யழலிற் காய்ச்சி உண்டிடின் குற்றம் நீங்கும் என்றனர் மறையோர். ஆயின் அதனை உண்டு உயிர்நீப்பன் என்று விரைந்தனர். அறிந்த தந்தை அப்படியாயின் உனக்குமுன் நான் இறப்பேன் என எழுந்தனர். இதற்கென்செய்வம் எனக் கவன்றனர் மகனர். அதுகாலை அங்குற்ற சாண்டில்ய முனிவரின் ஆணைவழி இங்குற்றுத் தேவதீர்த்தம் படிந்து கள்ளுண்ட குற்றம் நீங்கிடப்பெற்றாராகி, காரோண நாதன் திருவடிகள் பணிந்து, தன்னூர்சார்ந்து வாழ்வுற்றனர். பின்னர் சிவனுலகம்புக்கு இன்பமார்ந்தனர்.

**காளகண்டன்** (நா. பு. ப. 48.)

இவன் கங்காதீரத்துப் பஞ்சானம் எனும் ஊரினன். அந்தணர்குலத்துவந்தவன். நல்ல கட்டமைந்த வடிவினன். காமர்குணத்தாள் சாருமதியென்பாள்பால் தோன்றியவர். விட்டுணுசாமியெனும் மறையோன் புதல்வர். கூற்றினுங்

O23:3-2193 N

N54

கொடியோன் காளகண்டன் எனும் பெயரான். உண்பது உடுப்பது முருடருடன் திரிவது தவிர்த்து யாதும் அறியா தவன். இவனே மைந்தனுகப்பெற்ற விட்டுணுசாமி ஒரு நாள் அத்தியயனம் புரிந்திலே. வீணே உழல்கின்ருய்! என்னே பயன் என்று சினந்தானுகிக்கதைகொண்டுபுடைத் தனன். அவனைப்பற்றித்தொடர்ந்து தானும் அறைந்தான். தந்தை உயிர் துறந்தான். பிரமகத்தியுற்று அலேந்தான். நல்வினையால் வசிட்ட முனிவரை அணுகிப் பதம் பணிந்து உற்றது கூறினுன். இரங்கிய முனிவர், காரோணத்துற்ற ஒரு கிளி முன்னுள் வலம்வந்து அரசுபெற்றது. நீயும் சென்று வழிபடுவையாயின் சுகமுறுவாய் என அருளினர். ஆணைவழி இங்குற்று நூற்றெட்டுமுறை வலம் வந்து குற்றம்நீங்கி வழிபட்டு முத்தியுற்றனன்.

மித்திரன் (நா. பு. ப. 44.)

இவன் சவ்வீரநாட்டுக் கற்படகோத்திரத்து அந்த ணன். இவன் மனைவி கற்ககோத்திரத்துவந்த பதுமவல்லி என்பாள். அவளுடன் இல்லறம் நடாத்திவந்தனன். இறைவன் இணையடிக்கு அன்புமிக்குளான். ஒருநாள் தவம் செய்தலின் விருப்பமிக்குடையனுனன். தந்தை ஆணைபெற்றுத் தபோவனம் மேவி, அங்குற்ற நாரதரைப் பணிந்து, மாதவம் புரிதற்கு இடம் வேண்டினன். நாரதர் கண்டகமாநதிதீரம் செல்க எனப் பணித்தனர். ஆணைவழி அங்குற்றனன். தவச்சாலே அமைத்து, பொறியடக்கிப், புனிதன்பொற்பாதம் மனத்துட்கொண்டு அண்டகடாகம் வியப்ப அருந்தவம் ஆற்றினன். அதுபோது இவரைக் கண்டிடவேண்டி ஈன்ற தந்தை வந்தான். நேரம் நடு இரவு ஆதலின் யாதோ மிருகம் என எண்ணி மித்திரன்

கதைகொண்டு எறிந்தான். தந்தை கட்டமடைந்து ஆவி நீத்தான். தந்தையென்றறிந்து அறியாமல் என்செய்தேன் எனக் கிலேசமுற்ருன். சுற்றுளமாதவர் கூடித் தேற்றிட சற்று மனந்தேறி. ஈமக்கடன் முடித்தான். பிரமகத்தி தொடர்ந்திட மிலேச்சமாதுடன் கலந்தனன். யாவரும் பழிகூறிட இழிவுக்குள்ளாகி கிருஷ்ணாநதிதீரமுற்ருன். முற்கலனைப்பணிந்து அவர் அருள்வழி இங்குற்று பெருமானைப்பணிந்து பாவம் நீங்கி முத்தியுற்ருன்.

**பாற்கான்** (நா. பு. ப. 43)

இவன் அந்தணன். இறையடியலது யாதும் அறியாத சிந்தையான். வாழ்க்கையில் விருப்பிலான் பிறவி நீக்கம் ஒன்றனையே கருதிடும் உள்ளத்தான். உதங்கமாமுனிவர் பதம்பணிந்து அதுவேபெற அருளிடவேண்டினுன் அவர், அருள்வழி பசுவின் பெருமைகேட்டு இங்குற்றனன்

புண்ணிய ஆக்களைப் பூசைசெய்தலோடு
தண்ணிய பால்கறந்து அமலற்கு ஆட்டுவார்
கண்ணிய ஆயுளும் கற்பம் நீடுற
எண்ணிய எண்ணியாங்கு எய்திவாழ்வரே.

என, உதங்கர் அருளியமை நினைவு கூர்ந்தான். நீராடிப் பால் கொணர்ந்தாட்டி வழிபாடு செய்து இன்புற்ருன். பவத்துயர் நீங்கிப் பரமுத்தியுற்ருன்.

**தருமபுஞ்சன்** (நா. பு. ப. 41)

இவன் அந்தணர் குலத்தான் அங்கநாட்டவன். சண்டதருமன் மகன். தீமையே வடிவாய் வந்தோன். தந்தை உளம் வருந்திட மனைவளப் பொருள் யாவையும்

நாரியர்க்கு வவ்வி ஈந்தனன், குருவினைக் கொன்றனன். அவர் மனையரை வலியத் தழுவினன் தீமைகள் விளைவிற்கு இடமாயினான். தந்தை துரத்திட கானகத்திற்கு ஓடினன். பசிமேலிட வேடன் தந்த ஊனோடு கள்ளும் உண்டான். மயக்கம் மீதூரக் கிடந்துழன்றான். அது காலை புத்திர வாஞ்சையால் தேடிவந்த தந்தை ஓர் அறை கொடுத்தனன் தெளிந்தான். மகன், நல்லறிவு சற்றுப் பொருந்திட அவனை அழைத்துக்கொண்டுவந்து இல்புக்கான். இரவு பூசைபுரிவேளை, சங்கரனைவேண்டி யிரந்தனன். கனவிடை இறையருள் வழி இந்திரன் வரலாறுகேட்டு (இவ்வரலாறு இந்திரன் நா. பு. ப. 41. ள் காண்க) உவந்து மகனொடும் இங்குற்று வழிபட்டு அருளுற்றான்.

புரோகிதன் (நா. பு. ப. 51.)

இவன் கொற்கைத்துறையில் நீராடிக் கரையேறிய பாண்டிய மன்னன் முன் எதிருற்றான். அது காலை மறையவர் யாவரும் கொண்மின் என்று நிதிகள் பல வற்றைத் தானமாக ஈந்தான் மன்னன். பெற்ற இவன் காற்கூறு ஈந்து ஏனையன தான் கவர்ந்தான் சின்னாள் வாழ்ந்து இறந்து நரகுற்று வருந்தினான். மீண்டும் பிறவி பலவுற்று இடருற்றனன் பிரமராக்ஷசனாகி அலைந்தான் நல்லூழ் முன்னின்று உதவிட கபில முனிவரை அடுத்தான் செய்த தீமைசொல்லி அழுதான் அவர் அருள் வழி இங்குற்று வழிபட்டுத்தீமைகள் நீங்கிச்சுவர்க்கம் உற்றான்.

தருமன் (நா. பு, ப. 50)

இவன் வணிகன். தந்தை தாயிலான். வறுமையின் உழன்றான் நோய் பலஉற்றான். அகம் பலபுக்குப் பிச்சை யேற்றுண்டான். குட்டநோய் மிக்குற வருந்தினான்.

பஞ்சகந்தக் கேடே, பரமுத்தியெனும் புத்தர்மதப், பிடகம் வாஞ்சையனுய்; நஞ்சம் நிகராம் அவர் கொள்கை நண்ணினுன். இலம்பாடு ஆங்கும் தவிர்ந்திலன். நமக்கு நிதியம் வரும் நாள் எந்தநாள் எனக்கவல்வான். நல்வினையால் இங்குற்றுன். பசியால் வருந்திப் பலிபீடத்தின், இடும் வெண் சோறு எடுத்து உண்டான். நீண்ட பசி வருத்திடச், சோர்வுண்டு வீழ்ந்தான். இறைவன் ஆங்கு அருள் செய்தான் எழுந்தான் வணிகன். நோய் நீங்கிக் குபேரனினும் மிக்க செல்வனுயினன். மனைமக்களுடன் இன்புற்றுன். ஈகை, அன்னமிடல், அரசர் நட்பு யாவும் உற்றுன் நாகை இங்கு இணையாரும், இலனுய் வாழ்ந்தான். வழிபட்டுப் பலகாலம் வாழ்ந்திருந்து, முத்தியின்புற்றுன்.

மூகை (நா. பு. ப. 55.)

இவன் இங்குதித்த வணிகன் முன்செய்வினை வயத்தால் ஊமையனுய்த் தோன்றினுன். பசுவினைக்காத்திடும் தொழிலின் மேவினுன் ஒருநாள் இராமுழுதும் இருளில் ஓடி உழன்ற பசுவுடன், அதனைப் பற்றுவானுகித் தானும் திரிந்தனன். அன்று சிவராத்திரி தினம் ஆகையால் அதன் பயனுற்றுனுகிப் பெற்ற மறுபிறவியில் சாருணநாட்டரசனுயினுன், பசுவும் அமைச்சனுயது முன் உணர்வு கைகூடிட இங்குற்று வழிபட்டு அருளுற்றனன். தெரியாமல் இத்தலம் மருவினர்க்கே பயன் இதுவெனில் தெரிந்து வழிபட்டார்களது பயன் அளவிடற் பாற்றே.

தேவலன் (நா. பு. ப. 12)

இவன் வணிகன். மாபாதகன். தன்மை, பொறுமை, நற்றவமுடையார்க்கு உதவல் வண்மை, கண்ணேட்டம் ஆண்மை வருவதுணர் நுண்மை, அறம்புரிகொள்கை,

நோற்றல் ஆய உண்மைகள் இவன் இருந்த ஊரிலும் இலதாயது, மனைமக்களையும் இழந்து திரிந்தான். பெரு நோயுற்றுப்பசியால் வருந்தி மெலிந்தான். நல்லூழுந்திட இங்குற்றான். முனிதீர்த்தமாடிய நாரதர் மேலுற்ற தீர்த்தநீர்த் திவலை மீதுறப்பெற்றான். தானும் தீர்த்தமாடி முனிவர் அருள்வழி இங்குப் பலகாலம் பெருமானைப் பணிந்து இருந்து அருளுற்றான்; பின்னாள் சிவகணத் தலைவன் ஆயினான்.

சுண்டிலை பஞ்சசனன் (நா. பு. ப. 12)

சுண்டிலை யென்பாள் இவள் பரத்தையள் எழில்மிக் காள், இவள்பால் மயக்கமுற்ற, மன்னரின் காவல் தலைவன் பஞ்சசனன். அவளோடும் முயங்கித் தன் வளமெல்லாம் போக்கினான். பலர் பொருள் கவர்ந்தும் ஈந்தான். அவ் வகையின் ஒருநாள் வணிகர் குலத்துவந்த சிவயோகி எனும் பெயரவர் ஒருவரது மனையின் நண்ணினான். குணம், சீலம் அருச்சனை, அடியரை அரன் என எண்ணுதல். நித்தியக் கடன் அடியரொடும் உண்ணல் ஆய நலமெலாம் உற்றோன் அவனது பொருள்களெல்லாம், கவர்ந்தான். அவளுக்கு ஈந்தான். சிவயோகி, அதுபற்றிச் சிந்தை செய்தானிலன், இச்செயலை அறிந்த மன்னரின் ஆணை; அவன் உயிரை மாய்த்திட முன்னின்றது. அதுகாலை சிவயோகி அங்குற் றனர். இது இவன் செயலன்று கவர்ந்தவர்வேறு அவருக்கே அத்தண்டனை என்றனர். அரசன் விடுவித்திட காவலான் சுண்டிலைபால் ஏகினான், ஒருநாள் அவளொடும் நண்ணி னான். இங்கு முனிதீர்த்தத்துள் படிந்தான் பரமன் அருள் முன்னின்றருளிடப் பெருமான் பதம்பணிந்து, முத்தியுற் றான் கவர்ந்த பொருள் சிவப்பொருளாதலின் சிவனுக்கே உரிய பொருளாயது.

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.** (நா. பு. ப, 56)

இவர் அயவந்தியைப் பணிந்து இங்குற்றனர். அடியரொடும் ஆலயத்துள் நண்ணிப் பெருமான் அடியிணைகளைப் பணிந்தனர். தோகை உமையவட்கு ஒருபாகத்தை நல்கிய பிறையணி சென்னியர் எம் சிவனுர்க்கு உறைவிடமாவது காரோணமே. எனப் பதிகங்கள் அருளிப் போற்றினர்.

**திருநாவுக்கரசு நாயனர்** (நா. பு. ப. 57)

இவர் இங்குற்றுப் பெருமான் கழல் பணிந்தனர். தலவிசேடமெலாம் அருளால் உணர்ந்தார். யாவரும் அதிசயிப்பத் திருப்பதிகம் அருளிடுவாராயினர். கற்ப நாளினும் அழியாத்தலம் காரோணம் ஒன்றே காட்சி உறுதலால்; ஏனைய தலத்தமரும் கடவுளரும் இங்குப் புகுவார். இதன் சீர் காணலாம். என அருளிப் பணிந்து, அருள் பெறக் காட்டினர்.

**சுந்தரமூர்த்தி நாயனர்.** (நா. பு. ப. 58)

இவர் ஆரூரிலிருந்து பரவையம்மையாரது கொடைக் குறைநீக்கம் பெறுவிப்பான் கருதி. இங்குற்றனர். தோழப் பெருமான் அடிபணிந்தனர். முத்தாரம், வயிரமாலை, கத்தூரி, சாந்தம், காம்பினெடு நேத்திரம், பொற்கட்டி, பரி, பொற்சுரிகை முதலாய வேண்டித் திருப்பதிகம் அருளிப்பெற்றனர்,

**அதிபத்த நாயனர்.** (நா. பு. ப. 59)

இவர் இத்தலத்து அவதரித்த பரதவகுலத்தவர். அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர். விரிதிரை சூழ்கடனுகை அதிபத்தர்க்கடியேன் எனத்திருத்தொண்டத் தொகையுட்

போற்றப்பெற்ற பெரியார். தனது குலத் தொழிலின் தலைநின்றபுகழினர். இறை இணையடிமறவாச் சிந்தையர். கடலில் அகப்படும் மணிமீன் முதலில் கிடைப்பதனை அரற்கென நீரிலேயே விட்டிடும் நியதியார். ஓர்நாள் மாலைவரை முயற்சியிற் கிடைத்த ஒரு விலைமதிப்பில்லா நவரத்நமாயமைந்த மீனொன்றினையும் அவ்வாறே விடுத்து பாசம் விடுத்தனர். வறுமையையும் எண்ணிலர் மகிழ்ந்த அரனார் அருள்புரிந்தனர் அரன்பணிபோற்றி அருளுற்றனர்.

திருப்பதிகம் அருள்வன :

வினையில் அடியார் வழிபட இருந்தோன். கொன்றையணிந்த கடவுள். அடியார்க்கு அருள்புரிவோன். விண்ணவர்க்கும், சிந்தைசெய்தற்கு வலியன். பெண், ஆண் என நின்றோன். ஆணும் பெண்ணுமாகி அடியர்க்கருள்வோன். ஞானம் வல்லார் பிரியாது வழிபடுவோர் காணும் பரமன், திங்களொடு பாம்பணிந்தோன். பொய்யோர் மனம் பாழ்படுப்போன். பூசனைசெய்வார் எய்த, வாழ்வோன். வெண்கடம்பொடு, திங்கட்கண்ணி அணிந்தோன். அவனை நினைதல், உணர்தல், ஏத்தல், இரவும் பகலும் காணல் வடிவினை உளத்திருத்தல் திருவடி தரித்தல். ஆதிசெயல்களை உய்வு, களிப்பு வேண்டும் நெஞ்சீர் வல்லீராய் நினைமின் பெற்றீராயின் பிறந்தீர். அஞ்செழுத்துரைத்திடத் தருதி சங்கர அருளல்வேண்டும். காண்டற்கினியன். கண்டிடின். வினைகள் நீங்கும். காலனும் அடரான். தொழுதுய்மின். சிந்தை செய்வார்களைத் திருமகள் பிரியாள். காரோணமே, அவன் உறைவிடம். எஞ்ஞான்றும் அங்கு காணலாம் சொல்லுவார், கேட்பார். துயருறார், அமருலகாள்வர்.

## ஆலயம்

அழகிய மூன்று திருமுன் கோபுரத் திருவாயில் களோடு தெற்கு மேற்கிலும் இரண்டு வாயில்களையுடை யது. இரண்டுபிரகாரங்கள். வசந்தமண்டபம் மகாமண் டபங்கள் திருமாளிகைப்பத்திமண்டபங்கள். கருப்பக்கிரக அர்த்தமண்டபங்கள் திகழ, வெளிப்பிரகாரத்துள் அம்பிகை ஆலயத்தையும் உள்ளுடையதாகித் திருமதில்கள். மட விளாகங்கள் திருவீதிகள் சூழ்ந்து அழகுசெயத் திகழ் கின்றது. அமரநந்தீசர், மலையீசர், அழகமுத்துப் புல வர்க்கு அருள்சுரந்த குமாரர்கோயில் விரப்பத்திரசுவாமி கோயில், நடுவர் கோயில். சட்டையப்பர். நாகநாதர். சௌந்தரராஜப் பெருமாள். அகத்தீசர் ஆலயங்களோடு சுமார் 10-க்கு மேற்பட்ட கணபதி ஆலயங்கள். வீசேட மிக்க மாரியம்மன், காளி, அங்காளம்மை. ஐயனார். திரௌபதை ஆலயங்களும் சூழ்ந்து அழகு செய நடுவே அமைந்த அழகினது.

## மூர்த்திகள்

**இறைவன் :** காயாரோகணநாதர். புண்டரீக முனி வரைத் தனது காயத்தோடு தழுவி ஆரோகணித்துக் கொண்டமைபற்றி இப்பெயரை உடையவர். கர்ப்பக் கிரகத்துள் இருந்து உமாமகேசுவரராகப்(ஆணும்பெண்ணு மாய் அடியார்க்கு அருள்செய்வான் எனும் தேவாரமும் உணர்த்திடும்) பின்னே காட்சி அருளிடுகின்ற இவர் முன்னே, அழகிய இலிங்க வ்டிவினராகித் திகழ்கின்றனர். அநாதியில் தோன்றியவர் ஆதலின் ஆதிபுராணர் எனும் பெயரையும் உடையார்.

**இறைவி:** நீலாயதாக்ஷி அம்மை இவர் மிக்க வரதர். கண்டார்க்கு எளிவரும் கருணைவடிவினர். இவர் பீடம் சத்திபீடம் அறுபத்துநான்கனுள் ஒன்று.

**தியாகேசர்:** இவர் சாலிசுகமன்னன் இந்திரனிடம் பெற்றுவந்து தாபித்த சுந்தரவிடங்கர். இவர் நடனம் பாரா வாரதரங்கம். அசபாநடனம், சூக்குமபஞ்சாக்கரநடனம் என்றும் கூறுவர் ஆன்றோர். இறைவர்க்குத் தென்பால் மகாமண்டபத்துள் திகழ்கின்றனர். இம் மண்டபத் துள்ளே திருமுன் வடபக்கலில் சிம்மாரூட ஐந்துமுகவிநாய கர் (ஏரம்பகணபதி) புண்டரீகமுனிவர், தனுசுமுருகன் அதிபத்தர் ஆய மூர்த்திகளோடு ஏனைய விழா மூர்த்தி களும் உள்ளனர். உட்பிரகாரம் கிழக்கில். சுந்தரர், பரவையார் தெற்கில் சமயாசாரிய விழாமூர்த்திகள். அறுபத்துமூவர் வாகனரூடத்திக்குத் தேவர்கள் புண்டரீக முனிவர், சாலிசுகமன்னர், துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி அஸ்த்ரதேவர், தக்ஷிணமூர்த்திகள், மேற்கில் மாவடி விநாயகர் இலிங்கமூர்த்திகள் 9. மயிலைப்பின்புறமுடைய வல்லீ தேவசேனையுடன் சுப்பிரமணியர். (இவருக்கு எதிரில் கிழக்கே கர்ப்பக்கிரகச் சுவற்றின் தென்பால் தக்ஷிணமூர்த்தி) இலிங்கமூர்த்தி 5. பைரவர் கெஜலெக்ஷ்மி வடக்கில் சண்டீசர், பிரமன், துர்க்கை, சனீஸ்வரர், நவக் கிரகமூர்த்திகள், நடராஜர். திருமுன் திருவாயிலுக்கு வடபுறம் சூரியன் சந்திரன், பைரவர், ஆயமூர்த்திகளும் திருமுன் நந்தி தேவர், பலிபீடம், துவஜஸ்தம்பம். அம் பிகை திருமுன் நந்திதேவர், பலிபீடம், துவஜஸ்தம்பமும் தென்பால் முருகன். வெளிப்பிரகாரத்துள் தென்மேற்கில் மாவடி விநாயகர், வல்லப கணபதி, காளியும், மேற்கில் தல விருட்சம் மாவும். வடமேற்கில் வீரபத்திரரும்,

வடகிழக்கில் காவடிதூக்கிய இடும்பன் தண்டபாணி மூர்த்தி தென்கிழக்கில் அதிபத்த நாயனாரும் உள்ளனர். திருவாயிலுக்கு உட்புறம் திருமுன் பெரிய நந்திதேவரும் நாகாபரண விநாயகரும் உள்ளனர்.

## பூசனையும் விழாவும்

நாடோறும் காலங்கள் ஆறிலும் பூசனை நன்கு நடைபெறுகின்றது. வைகாசியில் இறைவருக்கும், ஆடியில் அம்பிகைக்கும். திருவிழாச் சிறப்பாக நடைபெறுகிறது.

ஏனைய மாதாந்திர விசேட விழாக்களும் நடைபெறுகின்றன. பஞ்சக்குரோசம் விழாச் சிறப்புடன் நடைபெறுகிறது. இதன் தரிசன விசேடம் மிக்க பயன் தருவது,

## தீர்த்தங்கள்

தேவதீர்த்தம். இது ஆலயத்தின் தென்பால் உளது. இதன்விசேடம் அளவிடற்பாலதன்று. மூத்தி மண்டபமும் இதன் வடபக்கம் திகழ்கிறது. இதனில் செய்பணிகள் எவையும் பலமடங்கு பயன் தருவது எனப் புராணம் அருளுகிறது. முனிதீர்த்தம்: இது புண்டரீகமுனிவர் முதல் எல்லா முனிவர்களும் தோய்ந்த பெருஞ் சிறப்புடையது. மேல்பால் திகழ்கின்றது. தற்போது புண்டரி தீர்த்தம் எனவும், புண்டரீக முனிவர் தீர்த்தம் என்றும் வழங்கப் பெறுகிறது. தவிர சர்வதீர்த்தம் காக தீர்த்தங்களும் உளதாக ஆன்றோர் அருள்கின்றனர்.

## தலவிருக்ஷம்

மாமரம். இது வெளிப்பிராகாரம், மேலைத் திருவாயிலுக்குத் தென்பால் திகழ்கின்றது.

## கல்வெட்டு

(இவை ஆதீன வெளியீடு இரண்டாம் திருமுறை தலவரலாற்றுக் குறிப்பு பக்கம் 109, 110ல்உள்ளவை) ஏழு கல்வெட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. கயிலாசநாதர் கோயில் சுவரில் கி. பி. 1777-ல் ஒரு கனவான் இறந்ததாக டச்சு மொழியில் எழுதப்பட்டு உள்ளது.

சீன கோபுரத்தில் கிடைத்த ஒரு வெண்கலச்சிலையில் 12 நூற்றுண்டு எழுத்து இருந்தது. ஒரு சிறு கோயிலில் 1777ல் கவர்னர் ரெய்னர்வான் விலிசிங்கன் அதனைக் கட்டினதாக எழுதப்பெற்றுள்ளது. ஒரு பெரிய முரசின் பேரில் ஒரு சிறு எழுத்துண்டு. ஒரு வெள்ளி ஏட்டில் தஞ்சை அரசன் விஜயராகவன் நாகப்பட்டினத்தை டச்சுக்காரருக்கு கொடுத்ததாக எழுதியிருக்கிறது தெலுங்கு லிபியில்.

மற்றொரு வெள்ளியேட்டில் தமிழில் அதனையே மராட்டியர் கோரி 1676ல் உறுதிப்படுத்தி எழுதியிருக்கிறது. 1774ல் டச்சு தேவாலயம் கட்டப்பட்டது.

இத்தலம் நாகைப்பட்டினம் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் உள்ளது.

# வழிபட்டோர்

## தேவர்

1. உமையவள்
2. முருகன்
3. திருமால்
4. பிரமன்
5. பிராமிமுதலியர் (சப்தமாதர்)
6. இந்திரன்
7. அக்கினி
8. இயமன்
9. தேவர்கள்
10. நந்திநாதர்
11. காமதேனு
12. ஆதிசேடன்
13. வாசுகி

## முனிவர்

1. புண்டரீகமுனிவர்
2. அகத்தியர்
3. பதஞ்சலி
4. வியாக்ரபாதர்
5. பராசரர்
6. வசிட்டர்
7. வாமதேவர்
8. கோசிகன்
9. முனிவர் எழுவர்
10. கார்த்தியாயனர்
11. பரசுராமர்
12. கதம்பமாமுனிவர்
13. நவகோடிசித்தர்கள்
14. நைமிசமுனிவர்

## மன்னர்

1. சாலிசுகன்
2. இராமர்
3. தசரதர்
4. முசுகுந்தர்
5. அரசகேசரி
6. தனதத்தன்
7. பாண்டியன்
8. பத்திரசேனன்
9. மிருகன்
10. சயதுங்கன்
11. விரேதன்
12. விசித்திரகவஜன்
13. நரபாகன்

**அந்தணர்**

1. சோளீச்சரமுடையார்
2. சண்டதருமன்
3. காளகண்டன்
4. மித்திரன்
5. பாற்கரன்
6. தருமபுஞ்சன்
7. புரோகிதன்

**வணிகர் முதலோர்**

1. தருமன்
2. மூகை
3. தேவலன்
4. பஞ்சசனன்
5. சுண்டிலே

**அடியவர்**

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. சுந்தரர்
4. அதிபத்தர்

இவை திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான், திரிசிரபுரம், மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய திருநாகைக்காரோணத் தலபுராணத்திற்கண்ட வழிபட்டோர்களது குறிப்புச் சுருக்கம்.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்த சுவாமிகள்

# திருப்பதிகங்கள்

பண் - குறிஞ்சி

இராகம் - அரிகாம்போதி] [தாளம் - திரிபுடை

திருச்சிற்றம்பலம்

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபடக்
கனையுங் கடனாகைக் காரோ ணத்தானே. 1

1. அலையோசை மிக்க கடற்கரையிற்றிகழ்கின்ற நாகைக் காரோணத்து இடங்கொண்டுறையும் எம்பெருமான்; வினைகள் ஒழிந்து பரிபாகம் உற்ற அடியவர்கள் வழிபாடு விதிமுறையோடும் பொருந்திட வீற்றிருந்தருள்வோன், அவன், கங்கை நீர்பாய்ந்திட நனைந்த சடையினன், அதன்மிசைச், சூடிய வெண்டலை மாலையோடு விரிந்து மலர்ந்த கொன்றையினை அணிந்த கடவுள், அவனே எம் தலைவன். விரிகொன்றை புனையும் கடவுள் என்றருளிய முறைமை; தலைவனை நாடுகின்ற உயிர்கள் உணர்ந்திடக் கொண்ட அடையாளக்குறிப்பு. இக்கருத்தினைத் தோணிபுரத்துத் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் ஏழாவது பாடலுள்ளும் காண்க.

பெண்ணு ணெனநின்ற பெம்மான் பிறைச்சென்னி
அண்ணு மலேநாட னூரு ருறையம்மான்
மண்ணூர் முழவோவா மாடந் நெடுவீதிக்
கண்ணூர் கடனுகைக் காரோ ணத்தானே. 2

2. கடல் நாகைக்காரோணம்; காட்சிக்கினிமையது. முழவோசைமல்கிய மாடமாளிகைகள் செறிந்த திருவீதிகளே உடையது, அங்குறை சிவன்; பிறையணிந்த சென்னியன், அண்ணுமலே முதலாகிய நாடுகள் எவற்றையும் உடையோன், ஆரூரிடத்தும் உகந்துறையும் அம்மான், பெண்ணெனவும் ஆணெனவும் வடிவம்கொண்டு அருளிட நின்றபெருமான்.

பாரோர் தொழவிண்ணோர் பணியம் மதின்மூன்றும்
ஆரா ரழலூட்டி யடியார்க் கருள்செய்தான்
தேரார் விழவோவாச் செல்வன் றிரைசூழ்ந்த
காரார் கடனுகைக் காரோ ணத்தானே, 3

3. நாகைக்காரோணம்; வன்மை மிக்க அலேகளோடு மேகங்கள் சூழ்ந்து பொருந்திய கடற்கரையிடத்தது, தேர் விழாமல்கிய சிறப்பினது, அங்குறை சிவன்; இப்புவியினரும் தேவர்களும் பணிந்திட இடையூறு விளேவித்த அசுரர்களது மூன்று புரங்களேயும் தீயுண்டிட ஆக்கினேன். அடியவர்க்கு அருளேப்புரிந்தோன்.

மொழிசூழ் மறைபாடி முதிருஞ் சடைதன்மேல்
அழிசூழ் புனலேற்ற அண்ணல் லணியாய
பழிசூழ் விலராய பத்தர் பனிந்தேத்தக்
கழிசூழ் கடனுகைக் காரோ ணத்தானே. 4

4. உப்பங்கழிகள் சூழ்ந்த கடல் நாகைக் காரோணத்தெம்மான்; மொழிசூழ் மறைபாடிய முதல்வன், உல

கெல்லாம் அழிந்திடும் வகையில் சூழ்ந்தெழுந்த கங்கை யாற்று நீரினைத் தனது சடையொன்றினில் ஏற்றருளி னோன், குற்றங்களிலராய மேலாந் திருவுற்ற பத்தர்கள் பணிந்து வழிபடாநின்று அருள்வோன்.

ஆணும் பெண்ணுமா யடியார்க் கருணல்கிச்
சேணின் றவர்க்கின்னஞ் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்
காணுங் கடனாகைக் காரோ ணத்தானே. 5

5. கடல் நாகைக் காரோணத்தெம் சிவன், ஆணும் பெண்ணும் ஆய அருள்வடிவம்கொண்டு அடியர்கட்கு அருளை நல்கிடுவோன், விண்ணிடத்தவர்கட்கும் சிந்தனை புரிந்திடுதற்கு வலியோனாயினன் ஆயினும், பேணி நினைந்து வழிபடுகின்ற முறைமையினில் விளக்கமுற்ற தொண்டர் கட்கு எளியனாகி அவர்கள் காண நீங்காது நின்றருள் வோன்.

ஏனத் தெயிறேடும் மரவ மெய்பூண்டு
வானத் திளந்திங்கள் வளருஞ் சடையண்ணல்
ஞானத் துறைவல்லார் நாளும் பணிந்தேத்தக்
கானற் கடனாகைக் காரோ ணத்தானே. 6

6. கானல்சூழ்ந்த கடல் நாகைக் காரோணத்தான்: பன்றிப் பல்லோடு பாம்பினைத்தரித்த மேனியன், இளமதி வளர்கின்ற சடைமுடியண்ணல், ஞானத்துறையில் வல்ல பெரியோர்கள் நாள்தோறும் பணிந்தேத்தி வழிபட இங்கு உறைந்தருள்வோன்.

அரையா ரழனுக மக்கோ டசைத்திட்டு
விரையார் வரைமார்பின் வெண்ணீ றணியண்ணல்
வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடனாகைக் காரோ ணத்தானே. 7

7. நாகைக்காரோணம்; மலைபோலும் மரக்கலங்கள் திகழ்கின்ற கடற்கரையினிடத்தது. அங்குறை சிவன்; பாம்போடு எலும்பினை, அரையிற்றரித்தோன், வெண்ணீறணிந்த மணங்கமழ்கின்ற மலையொத்த மார்பினன்.

வலங்கொள் புகழ்பேணி வரையா லுயர்திண்டோள்
இலங்கைக் கிறைவாட அடர்த்தங் கருள்செய்தான்
பலங்கொள் புகழ்மண்ணிற் பத்தர் பணிந்தேத்தக்
கலங்கொள் கடனாகைக் காரோ ணத்தானே. 8

8: மரக்கலங்களைத் தன்னகத்தேகொண்ட கடற்கரையிடத்தது நாகைக்காரோணம். இங்குறை சிவன்; பலத்தாலும் புகழாலும் சிறந்த மலையொத்த உயர்ந்த திண்தோளன், இலங்கையரசன் இராவணனை (கயிலையைப் பெயர்த்த ஞான்று) வாட்டம் உறும்படி அடர்த்தோன், பின் அங்கு இரக்கமுற்று அருளையும் புரிந்தோன், மேலாம் புகழமைந்த பத்தர்கள் இவ்புவிமிசைப் பணிந்தேத்திட உகந்திருந்தருள்வோன்.

திருமா லடிவீழத் திசைநான் முகனேத்தப்
பெருமா னெனநின்ற பெம்மான் பிறைச்சென்னிச்
செருமால் விடையூருஞ் செல்வன் திரைசூழ்ந்த
கருமால் கடனாகைக் காரோ ணத்தானே. 9

9. நாகைக்காரோணம்; அலைகள்சூழ்ந்த பெரிய கரிய கடற்கரையிடத்தது, இங்குறை சிவன், மாலும் நான்

முகனும் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தேத்திட நின்ற பெருமான், பிறையணிந்த சென்னியன், பெரிய இடப ஊர்தியன் எம்செல்வன்.

நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற அடியார்க் கருள் செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடனாகைக் காரோ ணத்தானே. 10

10. நாகைக் காரோணம்; கலீரென ஆர்க்கின்ற கடற்கரையிடத்தது. இங்குறை சிவன்; பற்களொடு பொருந்திய தலைமாலையை அணிந்தோன், பணிந்து ஏத்திடுகின்ற அடியவர்கட்கு அருளைப் புரிவோன், அறியாத பொல்லாச் சமணொடு தேரர் புறங்கூறித் திரிவர், பழி சாற்றி அலைவர், நல்லவர்கள் அருளுகின்ற அறவுரையும் கேளார். என்னேபயன்? ஆதலின், அடியராகி ஏத்தி அருளையுறுவீர்களாக.

கரையார் கடனாகைக் காரோ ணம்மேய
நரையார் விடையானை நவிலுஞ் சம்பந்தன்
உரையார் தமிழ்மாலை பாடும் மவரெல்லாம்
கரையா வுருவாகிக்கலிவா னடைவாரே. 11

11. கடற்கரையிடத்தது நாகைக் காரோணம், அங்குறை சிவன்; இடப ஊர்தியன், அவனைப் போற்றிச் சம்பந்தன் உரைத்தருளிய தமிழ் மாலை இஃது, இதனைப் பாடுகின்ற அடியவர் அழியாத உருவினைப்பெற்று அழகிய உலகினை உற்று இன்புறுவர்.

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி

இராகம் – எதுகுலகாம்போதி]    [தாளம் – இரிபுடை

திருச்சிற்றம்பலம்

கூனற்றிங்கட் குருங்கண்ணி கான்றநெடு வெண்ணிலா
வேனற்பூத்தம் மராங்கோதை யோடும்விராவுஞ்சடை
வானநாடன் அமரர்பெரு மாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ் கடனாகைக் காரோணமே. 1

1. நாகைக் காரோணம்; வேலிஒத்து கானலோடு கழிகள்சூழ்ந்து அழகுசெய, கடற்கரையிடத்து அமைந்து திகழ்கின்ற நகரம். அதுவே ஒளியினைக் காலுகின்ற திங்கட்கண்ணியோடு வேனல் காலத்தில்அலர்ந்த, வெண் கடப்ப மலர்மாலை விரவிய சடையவன். வானநாடன், தேவர் பெருமானுரது. இடமாகும். கண்ணி - மாலை, மராங்கோதை - வெண்கடப்பமலர்.

விலங்கலொன்று சிலையாமதின் மூன்றுடன் வீட்டினான்
இலங்குகண்டத் தெழிலாமை பூண்டாற் கிடமாவது
மலங்கியோங்கிவ் வருவெண்டிரை மல்கிய மால்கடல்
கலங்கலோதங் கழிசூழ் கடனாகைக் காரோணமே. 2

2. கடல் நாகைக் காரோணம்; அமைதியதாயும் அலைந்து உயர்ந்து ஓங்கியும். வருகின்ற வெள்ளிய அலைகள் மல்கிய, கடற்கரையிடத்தது. கலக்கமுற்ற, அக்கடலின், ஓதநீரோடு, கழிகள் சூழ்ந்த, அழகினது. அதுவே; மேரு மலையை வில்லாக்கொண்டு நொடிப்பொழுதில் அசுரர்களது மதில்கள் மூன்றையும் அழித்தோன், நீலம் விளங்கு கண்டத்தினன், அழகிய ஆமையை அணியாப்பூண்டோன் சிவனுரது இடம்.

வெறிகொளாருங் கடற்கைதை நெய்தல்விரி பூம்பொழில்
முறிகொண்ஞாழன் முடப்புன்னை முல்லைம்முகை வெண்மலர்
நறைகொள்கொன்றைந் நயந்தோங்கு நாதற் கிடமாவது
கறைகொளோதங் கழிசூழ் கடனாகைக் காரோணமே. 3

3. நாகைக்காரோணம்; கடலிடை எழுந்த கரிய, ஓதநீரோடு உப்பங்கழிகள் சூழ்ந்த வளத்தினது, மணத்தினைக்கொண்ட, கைதைகள்செறிந்த, நெய்தல் நிலத்தது, பரந்துவிரிந்த அழகியசோலைகளை உடையது. அதுவே; அச்சோலையிடைச் செறிந்த ஞாழல், புன்னை, முல்லையின் அரும்பு, வெள்ளியமலர், தேன்நிறைந்த கொன்றை ஆய இவைகளை விரும்பி அணிந்த சிவனாரது விளக்கமிக்கபதியாகும்.

கைதை - தாழை. வெறி - மணம். முறி - தளிர். முட - வளைந்த.

வண்டுபாடல் வளர்கொன்றை மாலைம்மதி யோடுடன்
கொண்டகோலங் குளிர்கங்கை தங்குங்குருட்குஞ்சியுள்
உண்டுபோலும் மெனவைத்துகந்தவ்வொரு வற்கிடம்
கண்டல்வேலி கழிசூழ் கடனாகைக் காரோணமே. 4

4. வண்டு இசைபாடுகின்ற கொன்றையினை, மாலைமதியோடுடன் அணிந்து, கொண்டகோலம், குளிர்ந்த, கங்கை தங்கிடும், வளைந்து சுருண்ட, முடிச்சிகையுள்: உண்டு எனச்சொல்லும்படி வைத்துகந்த ஒருவன், சிவனாரது இடம்; வேலியைப்போன்று கண்டலோடு கழிகள் சூழ்ந்த கடல்நாகைக் காரோணமாகும்.

கண்டல் - நெய்தல் நிலத்துச்செடி. குருள் - சுருள்:

வார்கோள்கோலம்முலைமங் கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச் சடைநெடு வெண்டிங்கண் ணிகழ்வெய்தவே
போர்கொள்சூலப் படைபுல்கு கையார்க் கிடமாவது
கார்கொளோதங் கழிசூழ் கடனாகைக் காரோணமே. 5

*5. கங்கைநீரைக்கொண்ட அழகிய சடையினன், அச் சடையிடைத், திங்களைத்திகழ அணிந்தோன், போர்த் தொழிற் தன்மையை முனையிற்கொண்ட சூலப்படை தாங்கிய கையினன். சிவன்; கச்சினைக்கொண்ட அழகிய முலையர், மங்கைப்பருவமாதரார்கள் மகிழ்வுடன் ஏத்தி வணங்கிட உகந்து உறையும் இடம்; மேகத்தினைக் கொண்ட கடலோத நீர்' உலவுகின்ற உப்பங்கழிகள் சூழ்ந்த கடல் நாகைக்காரோணமதுவே.*

விடையதேறிவ் விடவர வசைத்தவ் விகிர்தரவர்
படைகொள்பூதம் பலபாட வாடும்பர மாயவர்
உடைகொள்வேங்கை யுரிதோ லுடையார்க் கிடமாவது
கடைகொள்செல்வங் கழிசூழ் கடனாகைக் காரோணமே. 6

*6. அழகிய உப்பங்கழிகள் சூழ்ந்து திகழ்கின்ற கடல் நாகைக்காரோணமே, விடையேறி, பாம்பினைத் தரித்தோன், பூதப்படையினன், அப்பூதங்கள் பாடிட ஆடிடும்மேலோன், புலித்தோல் உடையன், சிவனாரது இடம்.*

பொய்துவாழ்வார் மனம்பாழ் படுக்கும் மலர்ப்பூசனை
செய்துவாழ்வார் சிவன்சேவடிக்கே செலுஞ் சிந்தையார்
எய்தவாழ்வா ரெழினக்க ரெம்மாற் கிடமாவது
கைதல்வேலி கழிசூழ் கடனாகைக் காரோணமே. 7

7. நாகைக்காரோணம்; வேலிஒத்து உப்பங்கழிகள் தாழைகள், சூழ்ந்திடக் கடற்கரையிடத்து. அழகொடுந் திகழ்வது. அதுவே; சிவனுர் விரும்பி உகந்துறையும் இடம். அச்சிவன்; உண்மைநெறி முறைமையில் பொய்த்து (மாறுபட்டு) வாழ்வார்களது மனத்தினைப் பாழ்படுப்போன், மலர்கள்கொண்டு பூசனைபுரிந்து வாழ்பவர். அப்பூசனையின் உகந்த சிவனுரது அடியிணைக்கே சேர்கின்ற சிந்தையுடைய பெரியோர்கள் அடைந்து வாழ்ந்திட (அருள்வடிவு கொண்டு இங்கு) தாம் வாழ்வார்.

பத்திரட்டி திரடோ ளுடையான் முடிபத்திற
அத்திரட்டி விரலா லடர்த்தாற் கிடமாவது
மைத்திரட்டிவ் வருவெண்டிரை மல்கிய மாகடல்
கத்திரட்டுங் கழிசூழ் கடனுகைக் காரோணமே. 8

8. கடல்நாகைக்காரோணம்; நீர் உண்டிட வந்த மேகங்களைத் திரட்டிக்கொடு வருகின்ற வெள்ளிய அலைகள் மல்கிய கடல், அக்கடலிடத்து எழுந்த, எழுகின்ற அவ்அலைகள், இருமடங்கு ஒலித்திடுகின்ற உப்பங்கழிகள் சூழ்ந்த அழகுமிக்குடையது. அதுவே; இருபது தோளுடையான் இராவணனது முடிகள் பத்தும் (கயிலையை எடுத்த ஞான்று) இற்றுப் போகும்படி செவ்விய செழுமைத்திரு விரலொன்றினுல் அடர்த்தோன், சிவனுரது இடம்.

நல்லபோதில் லுறைவானு மாலுந் நடுக்கத்தினுல்
அல்லராவ ரெனநின்ற பெம்மாற் கிடமாவது
மல்லலோங்கிவ் வருவெண்டிரை மல்கிய மாகடல்
கல்லலோதங் கழிசூழ் கடனுகைக் காரோணமே. 9

9. கடல்நாகைக்காரோணம்; செழுமையதாய் ஓங்கி யெழுந்த வெள்ளிய அலைகள் மல்கிய கடல், கல்லுகின்ற,

அக்கடலிடை யெழுந்த ஓதநீர், கழிகள் சூழ்ந்திட அமைந்தது. அங்கு இடங்கொண்டு உறையும் பெருமான் அந்நாள், அயனொடுமால் நடுக்குற்று * நாம் காணுதற்கு அல்லராவர். இவர், எனும்படி அனல் வடிவுகொண்டு நின்ற தொல்லோன்.

உயர்ந்தபோதின் னுருவத் துடைவிட் டுழல்வார்களும்
பெயர்ந்தமண்டை யிடுபிண்ட மாவுண் டுழல்வார்களும்
நயந்துகாண வகைநின்ற நாதர்க் கிடமாவது
கயங்கொளோதங் கழிசூழ் கடனாகைக் காரோணமே 10

10. போதிநீழல் உறைந்திடுவர், உடையிலாது திரிதர்வர், மண்டையில் இடுபிண்டம் உண்டு உழல்வார் ஆய புத்தரோடு சமண்சாக்கியர்கள் விரும்பிக் காணுவகைநின்ற நாதன், சிவன் உறைவிடம்; கடல் ஓதநீரினைக் கொண்ட குளங்கள், கழிகள் சூழ்ந்த நாகைக்காரோணம் அதுவே

மண்டை - பனங்குடை

---

* நடுக்கம்; கட்டு வாங்கம் கபாலம் கைக்கொண்டார்களாகி (சேர்வார்தாமே தாமாகச் செயும் அவனை உள்ளத்தே நேசித்து) சிவமாந்தன்மையுற்றிலர். அட்டாங்க வணக்கம் செலுத்தி அடியிணைகளில் பணிந்திலர் சேவடிகாண்டிடத் தருக்குற்று முயற்சித்தனர். அதன் பயனாகப், பட்டகட்டம் உற்றார். அங்கு இருவர் என்பது; இலிங்கபுராணம் 7 -வது, திருப்பாடல்.

பட்டகட்டந்தின் பிற்பகுதி. நடுக்கம்.

11

மல்குதண்பூம் புனல்வாய்ந் தொழுகும்வயற் காழியான்
நல்லகேள்வித் தமிழ்ஞான சம்பந்தனல்லார் கண்முன்
வல்லவாறே புனைந்தேத்துங் காரோணத்து வண்டமிழ்
சொல்லுவார்க்கு மிவைகேட்ப வர்க்குந்துய ரில்லையே 11

11. குளிர்ச்சியதாகி நிறைவுற்ற நீர் ஒழுகிப் பாய்கின்ற வயல்வளம் சார்ந்தது காழி. அக்காழியோன், கேள்விக்கினியநல்ல, தமிழ்ஞானசம்பந்தன் நல்லவர்கள் முன்னே, காரோணத்தை வல்லவாறு போற்றிப் புனைந்து ஏத்தியருளிய வண்தமிழ் இஃது. இதனைச் சொல்லுவார்களும், கேட்பார்களும் துன்பமிலராவர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருப்பதிகங்கள்

திருநேரிசை பண் - கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ்நாகை மன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே 1

1. நெஞ்சுடையீர்! வினையின் பயனாகப் பெண்டிர் முதலாகிய பந்தங்களுள் அழுந்தி, துன்பத்திற்கு இடமாவீர், (கேண்மின்) அலையோசை மிக்க கடலாற்சூழ்ந்த நாகைக் காரோணத்து இறைவனை (முறைமையின்) நினைதற்கு வல்லமையுடையீராயின் உய்யலாம்.

வையனை வையமுண்ட மாலங்கம் தோள்மேற்கொண்ட
செய்யனைச் செய்யபோதில் திசைமுகன் சிரமொன்றேந்தும்
கையனைக் கடல்சூழ்நாகைக் காரோணங் கோயில்கொண்ட
ஐயனை நினைந்தநெஞ்சே யம்மநாம் உய்ந்தவாறே. 2

2. உலகெலாம் உடையோன், உலகெல்லாம் உண்ட திருமாலின் அங்கத்தினை, தோள்மிசைத் தாங்கிய செம்மை மேனியன், செந்தாமரை மலரோன், பிரமனது தலை யேந்திய கையன், கடலாற்சூழ்ந்த நாகைக் காரோணத்துக் கோயிலை இடமாகக் கொண்ட ஐயன், பெருமானை; நெஞ்சமே! நினைந்தாய். நினைவின்பயனாக நாம் உய்ந் தோம்.

அம்ம - வியப்பு.

நிருத்தனை நிமலன்தன்னை நீணிலம் விண்ணின்மிக்க
விருத்தனை வேதவித்தை விளைபொருள் மூலமான
கருத்தனைக் கடல்சூழ்நாகைக் காரோணங் கோயில்கொண்ட
ஒருத்தனை யுணர்தலால்நாம் உய்ந்தவா நெஞ்சினீரே. 3

3. நெஞ்சுடையீர்! நிருத்தன், நிமலன், நிலமுதல் பூதங்கள் எவற்றினும் மூத்தோன், வேதவித்து, விளைகின்ற பொருள்கள் அனைத்தினுக்கும் மூலகாரணமான தலைவன், காரோணம் கோயில்கொண்ட ஒருவன், சிவனை; உணர்த லாகிய செயலினாலே; நாம் உய்ந்தோம்.

மண்டலை யிரந்துகொண்ட மாயனோடசுரர் வானோர்
தெண்டிரை கடையவந்த தீவிடந் தன்னையுண்ட
கண்டனைக் கடல்சூழ்நாகைக் காரோணங் கோயில்கொண்ட
அண்டனை நினைந்தநெஞ்சே யம்மநாம் உய்ந்தவாறே. 4

4. கடல் நாகைக் காரோணங் கோயில்கொண்ட சிவன்; அண்டங்கள் யாவும் ஆயவன், மூவடி மண்வேண்டி (வாமனராய் மாவலிபாற் சென்று) யாசித்த திருமால், ஏனைய தேவர்கள், அசுரர்கள், அமுதம் பெறவேண்டி அலைகடலைக் கடைந்தனர். ஆங்குவந்தது தீயவிடம். அது

கண்டு அஞ்சிப் போற்றினர், மால்முதல் தேவர்கள். அவர்களுக்கு இரங்கி, அவ்விடத்தினை உண்டு, காத்தருளிய நீலகண்டன். நெஞ்சமே! நீ அவனை நினைந்தாய் நினைவின் பயனாக நாம் உய்ந்தோம்,

அம்ம - வியப்பு.

நிறைபுனல் அணிந்தசென்னி நீணிலாஅரவஞ்சூடி
மறையொலி பாடியாடன் மயானத்து மகிழ்ந்தமைந்தன்
கறைமலி கடல்சூழ்நாகைக் காரோணங் கோயில்கொண்ட
இறைவனை நாளுமேத்த இடும்பைபோய் இன்பமாமே. 5

5. நாகைக் காரோணங் கோயில்கொண்ட சிவன்: திங்களொடு பாம்பு கங்கை அணி சென்னியன், ஓசையோடமைந்த வேதப் பாடலன், மயானத்துள் ஆடுதலை மகிழ்ந்தோன், இறைவன், அவனை; நாள்தோறும் ஏத்திடத் துன்பங்கள் போயிடும் இன்பங்கள் வந்திடும்,

கறை - கறுப்பு, குற்றம்.

வெம்பனைக் கருங்கையானை வெருவஅன் றுரிவைபோர்ந்த
கம்பனைக் காவற்காய்ந்த காலனை ஞாலமேத்தும்
உம்பனை உம்பர்கோனை நாகைக்காரோணமேய
செம்பொனை நினைந்தநெஞ்சே திண்ணநாம் உய்ந்தவாறே. 6

6. கொடிய பனைபோலும் துதிக்கையுடைய யானையுரிபோர்த்தோன், காலகாலன், உலகெலாம் ஏத்திடும் முதல்வன், நாகைக் காரோணம் மேயான், தேவதேவன், செம்பொனொத்த சிவன், அவனை நினைந்த நெஞ்சமே! நினைவின் பயனாக நாம் உய்ந்தோம். திண்ணம்.

வெங்கடுங் கானத்தேழை தன்னெடும் வேட ஞய்ச்சென்(று)
அங்கமர் மலைந்துபார்த்தற் கடுசர மருளினனை
மங்கைமார் ஆடலோவா மன்னுகா ரோணத்தானை
கங்குலும் பகலுங்காணப் பெற்றுநான் களித்தவாறே. 7

7. மாதரார்களின் ஆடல்மலிந்திய காரோணத்து மன்னிய சிவன்; உமையாளோடும் வேடனுய்ச்சென்று போர்புரிந்து, அருச்சுனர்க்குப் பாசுபத மருளினேன். அவனை; இங்கு இரவும் பகலுங் கண்டு தரிசித்தேன். பெற்றேன். களிப்புற்றேன், களிப்புவேண்டுவீர் நினைமின்.

தெற்றினர் புரங்கண்மூன்றுந் தீயினில் விழவோரம்பால்
செற்றவெஞ் சிலையர்வஞ்சர் சிந்தையுட் சேர்விலாதார்
கற்றவர் பயிலுநாகைக் காரோணங் கருதியேத்தப்
பெற்றவர் பிறந்தார்மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே. 8

* * * * * 9

8-9. காரோணத்துச் சிவனர்; பகைவர்களது புரங்கள் மூன்றையும் தீயினில் அழுந்திடச்செய்த அம்பினைத் தாங்கிய வில்லினர், வஞ்சனையாளர்தம், சிந்தையுட் பொருந்ாதவர். கற்றவர்கள் பயின்றேத்தும், அவரது காரோணத்தை ஏத்திடப் பெற்றவரே, பிறந்தவராவர், அல்லாத ஏனையர், பிறந்தும் பிறவாதவரே ஆவர்.

கருமலி கடல்சூழ்நாகைக் காரோணர் கமலபாதத்(து)
ஒருவிரல் நுதிக்கு நில்லா தொண்டிற லரக்கனுக்கான்
இருதிற மங்கைமாரோ டெம்பிரான் செம்பொனகம்
திருவடி தரித்துநிற்கத் திண்ணநாம் உய்ந்தவாறே. 10

*10.* நாகைக் காரோணத்து இறைவர்; மலரடி விரல் முனையின் ஆற்றலுக்கு (கயிலையைப் பெயர்த்தபோது) ஆற்றல் மிக்கோன் இராவணன் ஆற்றலறுகி வருந்தினான். அம்மையர் இருவரோடு பொருந்திடும் எம்பிரான், அவரது பொன்போலும் மேனியோடு திருவடிகளையும் உள்ளத்தே பொருந்திடத் தரித்து நின்று திண்ணம் நாம் உய்ந்தோம் ஆயினோம்.

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம் - பண் - கொல்லி

இராகம் — நவரோஸ்] [தாளம் — திரிபுடை

திருச்சிற்றம்பலம்

வடிவுடை மாமலை மங்கைபங் காகங்கை வார்சடையாய்
கடிகமழ் சோலை சுலவு கடல்நாகைக் காரோணனே
பிடிமதவாரணம் பேணுந் துரகம்நிற் கப்பெரிய
இடிகுரல் வெள்ளெரு தேறுமி தென்னை கொல்எம்மிறையே. 1

*1.* மணங்கமழ் சோலைசூழ் கடல்நாகைக் காரோணத்து எம் இறைவா! கங்கையணி சடையாய், உமை மங்கை பங்கா, ஏறிக்கொள்வதற்கு யானையும் குதிரையும் இருப்ப, இடபத்தை விரும்பியது என்கொல்?

கற்றார் பயில்கடல் நாகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே
விற்றாங் கியகரம் வேல்நெடுங் கண்ணி வியன்கரமே
நற்றாள் நெடுஞ்சிலை நாணவலித் தகர நின்கரமே
செற்றார் புரஞ்செற்ற சேவக மென்னைகொல் செப்புமினே. 2

2. கற்றவர்கள் பயில் கடல் நாகைக் காரோணத்து இறைவ? மூன்று கண்ணுடைய முதல்வா, உமது வில்லைத் தாங்கிய கை உமையாளுடையது. வில்லினது நாணினை வலித்த கரம், உம்முடையது. அங்ஙனமிருப்பப், புர மெரித்த சேவகம் எவ்வாறு. உருவினிற்பாதி உமையவள் ஆய சிவனே சொல்வீராக.

தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடல்நாகைக் காரோண நின்
நாமம் பரவி நமச்சி வாயஎன் னுமஞ்செழுத்தும்
சாமன்றுரைக்கத் தருதிகண் டாய்எங்கள் சங்கரனே. 3

3. மணவேள்வி கருதி மலர்ப்பாணம் தொடுத்த மன்மதனை விழித்தோய், காரோணத்து இறைவா! இறந்து படும் காலத்து உன் நாமஎழுத்து ஐந்தினைப் பரவிடவும், உரைத்திடவும் அருள்வாயாக, இறைவா! சங்கரா!

பழிவழி யோடிய பாவிப்பறிதலைக் குண்டர் தங்கள்
மொழிவழியோடிமுடிவேன்முடியாமைக்காத்துக்கொண்டாய்
கழிவழி யோதம் உலவு கடல் நாகைக் காரோண என்
வழிவழி யாளாகும் வண்ணம்அரு ளெங்கள் வானவனே. 4

4. கழிவழிச்சென்றெழுந்த கடலோதநீர் உலவுகின்ற கடல் நாகைக் காரோணத்து இறைவா! சமணர்கள், பழி பாவங்களின் வழியையே பின்பற்றியவர்கள், மயிர் பறித்திடும் குண்டர்கள், அவர்கள் சொல்லின்வழியே ஓடினேன். பயனிலாது வீணே இறந்துபடுவேன், என்செய்வேன்' ஆங்குஅடியேனை முன்நின்று காத்தனை, உமக்கே (எம்குடி முழுதும்) வழி வழி ஆளாதல்வேண்டும். எங்கள் வானவனே! அதனை அருள்வீராக.

செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத்தேமொழி
வந்து வலஞ்செய்து மா நட மாட மலிந்தசெல்வக் [யார்
கந்தமலி பொழில் சூழ்கடல் நாகைக் காரோணமென்று
சிந்தை செய்வாரைப் பிரியா திருக்குந் திருமங்கையே. 5

5. சிவந்த வாய், கரியகண், வெள்ளியநகை, தேன் போலும் மொழி, மாதரார்களது வலம்வருதல், நடனம் ஆடுதல் ஆய செயல்கள் மலிந்தது, அழகிய மணம் மலிந்த மலர்ச் சோலைகளால் சூழுண்டது கடல் நாகைக் காரோணம். அதனையும் (அங்குறை சிவனையும்) சிந்தனைபுரிந் திடுவார்களைத் திருமகள் பிரியாது பற்றிநின்று வாழ்வார்.

பனைபுரை கைம்மத யானை யுரித்த பரஞ்சுடரே
கனைகடல் சூழ்தரு நாகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே
மனைதுறந் தல்லுணு வல்மண் குண்டர் மயக்க நீக்கி
எனைநினைந் தாட்கொண்டாய்க் கென்னினியான் செயுமிச்சை
[களே. 6

6. யானையுரித்தோய், நாகைக் காரோணத்துக் கண்ணுதலே! இரவில் உண்ணுத அமண் குண்டர்களது மயக்கத்தை நீக்கி, என்னை ஒருபொருட்டாக நினைந்து ஆட்கொண்டனை! அதற்கு யான் செய்யும் இச்சைகள் இனி யாதுளது? யாவும் நின்செயலே என்பது. கனை-ஓசை. புரை - துளை.

சீர்மலி செல்வம் பெரிதுடைய செம்பொன் மாமலையே
கார்மலி சோலை சுலவு கடல்நாகைக்காரோணனே
வார்மலி மென்முலை யார்பலி வந்திடச் சென்றிரந்து
ஊர்மலி பிச்சைகொண் டுண்பது மாதிமை யோவுரையே. 7

7. சிறப்புமல்கிய பெரிய செல்வங்களை எல்லா முடையீர்! செம்பொன் மலையொத்த காரோணத்துச்

சிவனே! நீர், மாதரார்கள் வந்து இடுகின்ற பிச்சையை ஊர்மலிந்த இடங்களில் சென்று யேற்றுக்கொண்டுண்பது, சிறப்பாமோ? சொல்வீர்.

வங்க மலிகட லுகைக் காரோண த்தெழ் வானவனே
எங்கள் பெருமானோர் விண்ணப்பம் உண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாயக் கள்ளத்தை மெள்ளஉமை
நங்கை யறியிற்பொல் லாதுகண் டாய்எங்கள் நாயகனே. 8-9

8–9. கடல் நாகைக் காரோணத்துறை எங்கள் பெருமானே! விண்ணப்பம் ஒன்றுண்டு, அதனைக் கேட்டருள்வீராக, கங்கை அம்மையாரைச் சடையுளே மறைத்தீர், அத்திருட்டுத்தனத்தை உமையம்மையார் அறியின் பொல்லாமையாகும். காண்பீராக.

கருந்தடங் கண்ணியும் தானும் கடல்நாகைக்காரோணத்தான்
இருந்த திருமலை யென்றிறைஞ் சாதன் றெடுக்கலுற்றான்
பெருந்தலை பத்தும் இருபது தோளும் பிதிர்ந்தலற
இருந்தரு ளிச்செய்த தேமற்றுச் செய்திலன் எம்மிறையே. 10

10, காரோணத்தெம் இறைவன், உமையாளோடும், இருந்த திருமலையென்று, எண்ணிலன், இறைஞ்சினனு மல்லன், அந்நாள் அதனைப் பெயர்த்திடவே முயற்சி கொண்டு எடுக்கலுற்றான், பயனாகப் பெரிய தலைகள் தோள்கள், விழிகள் யாவும் பிதிர்ந்திட, அலறினான். எம் இறைவன், அங்கு இருந்து அருளையே புரிந்தனன், வேறெதுவும் செய்திலன். இருந்தவண்ணமே, அவ்வகையில் அலறிடச் செய்தனன், வேறு அதற்கென முயற்சி யாதும் செய்தானலன், முயற்சிகொண்டு விரலூன்றியிருப்பின் அவன் அலறிடுவதற்குத்தான் நேரம் ஏது, என்றும்காண்க.

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தொகை

இராகம் – நாதநாமக்ர்யா] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

பாணத் தால்மதின் மூன்றும் எரித்தவன்
பூணத் தான்அர வாமை பொறுத்தவன்
காணத் தான்இனி யான்கடல் நாகைக்கா
ரோணத் தானென நம்வினை யோயுமே. 1

1. அம்பினாலே புரங்களை எரித்தோன், ஆமையோடு பாம்பினை அணிந்தோன். காண்பதற்கினியன், கடல் நாகைக்காரோணத்தான்; என்றிட, வினைகள் ஓயும்.

வண்ட லம்பிய வார்சடை ஈசனை
விண்ட லம்பணிந் தேத்தும் விகிர்தனைக்
கண்ட லங்கமழ் நாகைக்கா ரோணனைக்
கண்ட லும்வினை யான கழலுமே. 2

2. வண்டுகள் அலம்புதலைப் புரிகின்றசடையுடை ஈசன், மேலுலகமும் பணிந்திடுகின்ற மேலோன், கண்டல் மணங்கமழும் நாகைக்காரோணம் இடங்கொண்ட நம்பன், அவனைக் கண்டிடின் வினைகள் நீங்கும்,

புனையு மாமலர் கொண்டு புரிசடை
நனையு மாமலர் சூடிய நம்பனைக்
கனையும் வார்கடல் நாகைக்கா ரோணனை
நினைய வேவினை யாயின நீங்குமே. 3

3. சப்திக்கின்ற கடல் சூழ்ந்த நாகைக்காரோணத்து நம்பன், மலர்கள் சூடிய சடையுடை ஈசன், அவனை நினைந்திடின் வினைகள் நீங்கும்.

கொல்லை மால்விடை யேறிய கோவினை
எல்லி மாநட் டமாடும் இறைவனைக்
கல்லி னார்மதில் நாகைக்கா ரோணனைச்
சொல்ல வேவினை யானவை சோருமே. 4

4. இடபம் உகந்தேறிடும் ஈசன், இரவில் நடன மாடிடும் இறைவன், காரோணத்தான் என்று சொல்லிட வினைகள் நீங்கும்.

மெய்யனைவிடை யூர்தியை வெண்மழுக்
கையனைக்கடல் நாகைக்கா ரோணனை
மைய னுக்கிய கண்டனை வானவர்
ஐயனைத்தொழு வார்க்குஅல்லல் இல்லையே 5

5. மெய்மையன், இடபஊர்தியன், மழுவேந்திய கையன், நீலகண்டன், வானவர்க்கு ஐயன், காரோணத்து இறைவன், அவனைத் தொழுவார்க்கு அல்லல் இல்லை.

அலங்கல் சேர்சடை ஆதி புராணனை
விலங்கல் மெல்லியல் பாகம் விருப்பனைக்
கலங்கள் சேர்கடல் நாகைக்கா ரோணனை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. 6

6. மாலையணிந்த சடையன், ஆதிபுராணன், (தலத்திறைவர் நாமம்) உமையொருபாகங்கொள்ளும் விருப்பினன், மரக்கலங்கள்சேர்கின்ற கடல்நாகைக் காரோணன் அவனை; வலங்கொண்டு போற்றிடுவார்களது வினைகள் அழிந்திடும்.

சினங்கொள் மால்கரி சீறிய ஏறினை
இனங்கொள் வானவ ரேத்திய ஈசனைக்
கனங்கொள் மாமதில் நாகைக்கா ரோணனை
மனங்கொள் வார்வினை யாயின மாயுமே. 7

7. கோபங்கொண்டெதிர்ந்த யானையைக் கோபித்தோன். ஈண்டிய தேவர்கள் ஏத்திடும் ஈசன், மதில்கள் சூழ்ந்த நாகைக் காரோணன், அவனை மனத்துட்கொண்டு போற்றிடுவார்களது வினைகள் மாய்ந்திடும்.

அந்த மில்புக ழாயிழை யார்பணிந்
தெந்தை யீசனென் றேத்தும் இறைவனைக்
கந்த வார்பொழில் நாகைக்கா ரோணனைச்
சிந்தை செய்யக் கெடுந்துயர் திண்ணமே. 8

8. ஈறிலாப் புகழ்தனைக்கொண்ட மாதரார்கள், எந்தையே! ஈசனே! என்று பணிந்து ஏத்திடும் இறைவன் மணங்கமழும் மலர்ப்பொழில்சூழ் நாகைக் காரோணம், மேயோன், அவனைச் சிந்தனை செய்வார்களது துன்பங்கள் கெடும். இது திண்ணம்.

கருவ னைக்கடல் நாகைக்கா ரோணனை
இருவ ருக்கறி வொண்ணு இறைவனை
ஒருவ னையுண ரார்புர மூன்றெய்த
செருவ னைத்தொழத் தீவினை தீருமே. 9

9. கருவாயவன், காரோணம் இடங்கொண்டோன், மாலோடு அயன் அறியா மாண்பினன், தன்னை உணராத அசுரர்களது புரங்கள் மூன்றையும் அழித்தோன், அவனைத் தொழுதிடின் வினைகள்நீங்கும்.

கடல்க ழிதழி நாகைக்கா ரோணன்தன்
வடவ ரையெடுத்து ஆர்த்த அரக்கனை
அடர வூன்றிய பாத மணைதரத்
தொடர அஞ்சுந் துயக்கறுங் காலனே. 10

*10,* கடலோடு கழிகள்தழுவிய நாகைக்காரோணம் இடங்கொண்டோன், வடகயிலையை எடுத்திடுவானாகி ஆரவாரித்த இராவணனை அடர்த்தோன், அடர்த்திட ஊன்றிய அவனது பாதத்தினை உள்ளத்தே அணைவுறக் கொண்ட அடியவர்களைத் தொடர்ந்திடக் காலனும் அஞ்சுவன். துன்பங்களும் நீங்கிடும்.

திருச்சிற்றம்பலம்.

பண் – திருத்தாண்டகம்

இராகம் – அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
திகழுந் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் தன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் றன்னைக்
காரார் கடல்புடைசூ ழந்த ணாகைக்
காரோணத்து எஞ்ஞான்றுங் காண லாமே. 1

*1.* உலகவர் பரவிடும் உத்தமன், பவளமலையொத்த வடிவினன், ஆயிரம் பேருடைய அண்ணல் திங்களைத் திருமுடியில் அணிந்தோன். பிறர் காட்சிக்கரியோன்,

பருப்பதம், பைஞ்ஞீலி, பழனம், ஆய தலத்துளும் உறை வோன், சிவனே; எப்பொழுதும் இங்கு காரோணத்துக் காணுதல் ஆம். பார் - பூமி, சீர் - சிறப்பு, கார் - மேகம்.

விண்ணோர் பெருமானை வீரட் டானை
வெண்ணீறு மெய்க்கணிந்த மேனி யானைப்
பெண்ணானை யாணனைப் பேடி யானைப்
பெரும்பற்றத் தண்புலியூர் பேணி னானை
அண்ணா மலையானை யானைந் தாடும்
அணியாரூர் வீற்றிருந்த அம்மான் தன்னைக்
கண்ணார் கடல்புடைசூ ழந்த ணாகைக்
காரோணத்து என்ஞான்றுங் காணலாமே. 2

2. தேவர்பெருமான், வெண்ணீறணிந்த மேனியன், பஞ்சகவ்யம் ஆடுவோன், பெண், ஆண், பேடியாவு மாயவன், வீரட்டானம். புலியூர், அண்ணாமலை, ஆரூர் ஆய இடத்தும் உறைவோன், சிவனே; காரோணம், இங்கு எப்பொழுதுங் காணலாம்.

சிறையார் வரிவண்டு தேனேபாடுந்
திருமறைக்காட் டெந்தை சிவலோ கனை
மறையான்றன் வாய்மூருங் கீழ்வே ளூரும்
வலிவலமுந் தேவூரு மன்னி யங்கே
உறைவானை யுத்தமனை ஒற்றி யூரிற்
பற்றியாள் கின்ற பரமன் தன்னைக்
கறையார் கடல்புடைசூ ழந்த ணாகைக்
காரோணத்து என்ஞான்றுங் காண லாமே. 3

3. ஒற்றியூர், தேவூர், வலிவலம், கீழ்வேளூர், வாய்மூர். வண்டுபாடும் சோலைசூழ் மறைக்காடு ஆயதலங் களையும் சேர்ந்து மன்னி இருந்து, ஆள்கின்ற பரமன், சிவலோகன், அவனைக் காரோணத்து எப்பொழுதும் காணலாம்.

அன்னமாம் பொய்கைசூழ் அம்ப ரானை
ஆச்சிரா மந்நகரும் ஆனைக் காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை
மூவுலகுந் தானாய மூர்த்தி தன்னைச்
சின்னமாம் பன்மலர்கள் அன்றே சூடிச்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னானைக்
கன்னியம் புன்னைசூழ் அந்த ணாகைக்
காரோணத்து எஞ்ஞான்றுங் காண லாமே. 4

4. பொய்கை சூழ் அம்பர், பாச்சிலாச்சிராமம், ஆனைக்காவிடத்தும் முன்னமே கோயில்கொண்டோன். உலகெலாந்தானாய மூர்த்தி, மலர்களோடு மதியணிந்த சிவனை; எப்பொழுதும் காரோணத்துக் காணலாம்.

நடையுடைய நல்லெருதேறான் றூர்வான் தன்னை
ஞானப் பெருங்கடலை நல்லூர் மேய
படையுடைய மழுவாளொன் றேந்தி னானைப்
பன்மையே பேசும் படிறன் தன்னை
மடையிடையே வாளை யுகளும் பொய்கை
மருகல்வாய்ச் சோதி மணிகண்டனைக்
கடையுடைய நெடுமாடம் ஓங்கு நாகைக்
காரோணத்து எஞ்ஞான்றுங் காணலாமே. 5

5. எருதேறும் ஞானமூர்த்தி, மழுவாட்படை யேந்திய பரமன் நல்லூர் மருகல் மேவிய நம்பன் சிவனை; எப்பொழுதும் நாகைக் காரோணத்துக் காணலாம்.

புலங்கள்பூந் தேறல்வாய்ப் புகலிக் கோனைப்
பூம்புகார்க் கற்பகத்தைப் புன்கூர் மேய
அலங்கலங் கழனிசூழ் அணிநீர்க் கங்கை
அவிர்சடைமேல் ஆதரித்த அம்மான் தன்னை

இலங்கு தலைமாலை பாம்பு கொண்டு
    ஏகாச மிட்டியங்கும் ஈசன்றன்னைக்
கலங்கற் கடல்புடை சூழ்ந்த அணுகைக்
    காரோணத்து எஞ்ஞான்றுங் காணலாமே. 6

6. சாய்க்காடு மேவியகற்பகம், புகலியின்தலைவன், கங்கையோடு தலைமாலையணிந்த சென்னியன், பாம்பினை ஏகாசமிட்டியங்கும் ஈசன் சிவனைக்; காரோணத்து எப்பொழுதும் காணலாம். ஏகாசம் - உத்தரீயம்,

பொன்மணியம் பூங்கொன்றை மாலை யானைப்
    புண்ணியனை வெண்ணீறு பூசினானைச்
சின்மணிய மூவிலைய சூலத் தானைத்
    தென்சிராப் பள்ளிச் சிவலோ கனை
மன்மணியை வான்சுடலை யூராப்பேணி
    வல்லெறுதொன்றேறு மறைவல் லானைக்
கன்மணிகள் வெண்டிரைசூழந்த ணுகைக்
    காரோணத் தெஞ்ஞான்றுங் காணலாமே. 7

7. எருதேறி வேதம்வல்லோன், சுடலையை ஊராக் கொண்டோன், சூலம் ஏந்தி நீறணிந்தோன், கொன்றை சூடி, சிராப்பள்ளிமேயோன் சிவனைக், காரோணத்துக் காணலாம்.

வெண்டலையும் வெண்மழுவு மேந்தி னானை
    விரிகோ வணமசைத்த வெண்ணீற் றானைப்
புண்டலைய மால்யானை யுரிபோர்த் தானைப்
    புண்ணியனை வெண்ணீ றணிந்தான் றன்னை
எண்டிசையு மெரியாடவல்லான் றன்னை
    யேகம்ப மேயானை யெம்மான் றன்னைக்
கண்டலங் கழனிசூ ழந்த ணுகைக்
    காரோணத்து எஞ்ஞான்றுங் காணலாமே. 8

8. ஏகம்பம் மேயான், எட்டுத்திசையினும் எரியாடுவோன், யானையுரி போர்த்தோன், கோவணம் தரித்தோன் தலையோடு மழு ஏந்தியகையன், அவனை; எப்பொழுதும் காரோணத்துக் காணலாம்.

சொல்லார்ந்த சோற்றுத் துறையான் தன்னைத்
    தொன்னரகம் நன்னெறியாற் றூர்ப்பான் தன்னை
வில்லானை மீயச்சூர் மேவினானை
    வேதியர்கள் நால்வர்க்கும் வேதஞ் சொல்லிப்
பொல்லாதார் தம்மரண மூன்றும் பொன்றப்
    பொறியரவ மார்பாரப் பூண்டான் தன்னைக்
கல்லாலின் கீழானைக் கழிசூழ் நாகைக்
    காரோணத்து எஞ்ஞான்றுங் காணலாமே 9

9. ஆல்நீழற்கீழிருந்து வேதம் அருளினோன், புரங்கள் அழிந்திடச் செய்தோன் பாம்பினைப் பூண்டோன், சோற்றுத்துறை, மீயச் சூரினும் உறைவோன், நன்னெறியால் நரகத்தை மூடுவோன், சிவனைக்; காரோணத்துக் காணலாம்.

மனை துறந்த வல்லமணர் தங்கள் பொய்யும்
    மாண்புரைக்கு மனக்குண்டர் தங்கள் பொய்யும்
சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்
    மெய்யென்று கருதாதே போத நெஞ்சே
பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை
    அவன்பற்றே பற்றாகக் காணி னல்லால்
கனைகடலின் தென்கழிசூழ் அந்த ணாகைக்
    காரோணத் தெஞ்ஞான்றுங் காணலாமே. 10

10. நெஞ்சமே! அமண்குண்டர், சீவரத்தர் இவர்கள் மாண்பென உரைத்திடும் பொய்யினை மெய்யெனக் கருதாதே! வருவாயாக. யானை உரிபோர்த்த எந்தை,

அவன் பற்றினையே பற்றுகக்கொண்டு கண்டாலல்லது, உண்மையைக் காண்பது எளிதன்று. (ஆதலின், அவ்வுண்மை வடிவாகத் திகழ்கின்ற) சிவனைக்; காரோணத்து எப்பொழுதும் காணலாம்.

நெடியானு மலரவனு நேடி யாங்கே
நேருருவங் காணுமே சென்று நின்ற
படியானைப் பாம்புரமே காத லானைப்
பாம்பரையோ டார்த்த படிறன் றன்னை
செடிநாறும் வெண்டலையிற் பிச்சைக் கென்று
சென்றானை நின்றியூர் மேயான் றன்னைக்
கடிநாறு பூஞ்சோலை யந்த ணாகைக்
காரோணத்து எஞ்ஞான்றுங் காணலாமே. 11

11. திருமாலும், நான்முகனும் (அடியோடு முடியினைத் தேடிய ஞான்று) அங்கே காணுவண்ணம் பொருந்திய அனல்வடிவு கொண்டு, கீழொடு மேற்சென்று செறிந்துநின்ற தன்மையன், பாம்பரையார்த்த படிறன், மூடை.மணம் கமழும் வெள்ளிய (பிரமன்) தலையோட்டினை யேந்திப், பிச்சைக்கென்று ஊர்கள்தொறும் சென்றோன். பாம்புரத்தோடு நின்றியூரையும் காதலித்தோன். சிவனை; இங்கு, மணமலர்ச் சோலைகள் சூழ்ந்து அழகோடு குளிர்ச்சி தங்கிய நாகைக் காரோணத்து எப்பொழுதும் காணலாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருப்பதிகம்

பண் - கொல்லிக்கௌவாணம்

இராகம் - நவரோஸ்] [தாளம் - ஜம்பை

திருச்சிற்றம்பலம்

**இது; சுந்தரமூர்த்தி நாயனர் ஆரூரிலிருந்து இங்கு வந்து, அம்பொன், மணிப்பூண், நவமணிகள், ஆடைகள் சாந்தம். அடற்பரிமா, பைம்பொற்சுரிகை, காம்பினெடு நேத்திரங்கள் பலவும் அளித்தருளும்படி இறைவனே வேண்டிப் பாடியருளிய திருப்பதிகம்*.**

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிருடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநா ளிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 1

**1. பதிகங்கள் பலவற்றைப் பாடுவீராகி, ஊர்கள் தோறும் பிச்சையேற்று உண்பீர்! பலியீடவந்த மாதரார்**

---

* இப்பதிகப் பாடலுட் சில வெள்ளிபாடல் என்பர் ஆன்றோர். அவைபற்றி இரண்டாம் திருமுறை ஆதீன வெளியீடு தலவரலாற்றுக் குறிப்பு 108 பக்கம் காண்க.

களை அல்லாதன பேசிப்பரிகசிப்பீர்! இறந்தார்கள் என் பணிந்து இடபம் ஏறித்திரிவீர்! நாகைக்காரோணத்து இடங்கொண்டு இருந்தீர். (அடியேற்கு) செல்வத்தை மறைத்துவைத்தீர். அணிந்துகொள்ள, முத்து, வைர மணிமாலைகள், பூசிக்கொள்ள, கஸ்தூரி, வாசனைச் சந்தனம், இவைகளை எனக்கு இரக்கமுடன் தந்தருள்வீராக.

வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீற்றி
விருத்தினொ னுமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைக ளவைகாட்டி வெருட்டிப்
பகட்டநா னொட்டுவனோ பலகாலு முழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழுந்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 2

2. நாகைக் காரோணத்து இடங்கொண்டுறையும் இறைவா! சேம்பினோடு செங்கழுநீர் மல்கிய திருவாரூர் இடங்கொண்டிருந்ததீவண்ணப்பெருமானும்நீரே. அடைந்தார்கட்குப் பாம்பினைக்காட்டிப் பாம்பணிந்த சடையினைக் காட்டி வெருட்டுகின்றீர்! பொருந்துவது எங்ஙனம் கூடும்? அடியேன், உம்பால் விருத்திவேண்டி உழல்கின்றேன், துருத்திபுக்கு இருந்தீர். எம்பால் இரங்கி, காண்பதற்குரிய நேத்திரங்களைப் பணித்தருள்வீராக. காம்பு - காண்பு. விருத்தி - பொருள்.

பூண்பதோர் இளவாமை பொருவிடையொன் றேறிப்
பொல்லாத வேடங்கொண் டெல்லாருங் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்

வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாட நிறைந்தநெடு வீதிக்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 3

3. காண்பதற்கினியது, அழகிய மாடமாளிகைகள் நிறைந்து, நீண்ட வீதிகளை உடையது நாகைக்காரோணம். இங்கு உறையும் எம்பெருமானே! உமது பண்பு; பாம்போடு மதியினைப் படர்சடையில்வைத்திடுவது, தொழில்; பிட்சாடனராகிப் பிச்சையிடும் பெண்கள் மாட்டுப், பகடு பேசித் தவறுது பலி கொள்ளுதல். ஊர்தி - காளைமாடு. பூண்பது; ஆமை. பேச்சு; வீண்பேச்சு. கொள்வது; மாதரார்களது வளையல்கள். நீர்இப்படிஇருப்பின், உம்மை மணந்த மலையரசன்மகளாகிய உமையம்மையார் பொறுத்திடுவரோ? சொல்வீராக.

விட்டதோர் சடைதாழ வீணைவிடங் காக
வீதிவிடை யேறுவீர் வீணடிமை யுகந்தீர்
துட்டரா யினபேய்கள் சூழநட மாடிச்
சுந்தரராய்த் தூமதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார் குழல்மடவார் தம்மைமயல் செய்தல்
மாதவமோ மாதிமையோ வாட்டமெலாந் தீரக்
கட்டியெமக் கீவதுதா னெப்போது சொல்லீர்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 4

4. காரோணம் மேவியிருந்த எமது பெருமானே! வீணையேந்தி, சடைகள் தாழ்ந்து ஆடிட, விடையேறி வீதியிடைவருவீர்! துட்டர்களாய பேய்கள் சூழ நடனமாடுவீர்! நீர் சுந்தரவேடத்தராகி தூமதி அணிந்ததும் வஞ்சமே. மடவார்களைமையலுறச் செய்தல் தவமாமோ?

அழகோ? வீணே அடிமையை உகந்தீர். வருத்தமெலாம் திரும்படி எமக்குப் பொற்கட்டிகளைத் தந்தருள்வது எப்போது? சொல்வீராக.

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
விணைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக் கேற்றுஞ்
சுந்தரனே கந்தமுத லாடையா பரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாண மொன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 5

5. கடல் நாகைக்காரோணம் மேவி உகந்துறையும் இறைவ! உம்மை முன்னே கண்டவர்கட்கும் (திருமால் பிரமர்க்கும்) காண்டற்கு அரியராய்க் கனல் வடிவுற்று நின்றீர்! மிடுக்கான காரியங்களை மேற்கொள்வீர். வெறுப்பன செய்வீர். பயனில பேசுவீர், விரும்பியபடியெலாந்திரிவீர். மேலும்மேலும் உமது தொண்டினையே தலையில் சுமத்திடுகின்ற சுந்தரனே! வாசனைச்சாந்தம், ஆடை, ஆபரணங்கள், இவைகளை உமது பொக்கிஷத்திலிருந்து எமக்குப்பணித்தருள வேண்டும். முன்னாள் அருளிய பிரமாணமும் ஒன்று உண்டே! நினைவுகூர்வீராக.

இலவஇதழ் வாயுமையோ டெருதேறிப் பூதம்
இசைபாட விடுபிச்சைக் கெச்சுச்சம் போது
பலஅகம்புக் குழிதருவீர் பட்டோடு சாந்தம்
பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறே
உலவுதிரைக் கடல்நஞ்சை யன்றமரர் வேண்ட
வுண்டருளிச் செய்ததுமக் கிருக்கொண்ணு திடவே
கலவமயி லியலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 6

6. மயிலொத்த மாதரார்கள் நடம்மலிந்தழகிய காரோணம் மேவிய முதல்வனே ! சும்மா இருந்திட மாட்டாமலோ, தேவர்வேண்ட நஞ்சினை உண்டு அமுதம்பெற நீர் அவர்கட்கு அருளினீர், (கருணையன்றோ!) உச்சிப் போழ்தில் உமையாரோடும் எருதேறிப் பூதங்கள் பாடிட அகங்கள்தோறும் பிச்சை யேற்றுத்திரிவீர். அடிமை எமக்கு; பூசிடச்சாந்தமும், உடுத்திடப் பட்டாடையும் இன்னமும் அருளாதிருக்கின்ற பரிசுதானென்னே ? அருள்வீராக.

தூசுடைய வகலல்குல் தூமொழியா ளூடல்
    தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய இலங்கையர்கோன் வரையொக்க அடர்த்துத்
    திப்பியகீ தம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்
நேசமுடை யடியவர்கள் வருந்தாமை யருந்த
    நிறைமறையோ ருறைவீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீரின் றெனக்கருள வேண்டுங்
    கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 7

7. காரோணம் மேவிய சிவனே! கயிலையைப் பெயர்த்தெடுத்த இராவணனை அடர்த்தீர்! பின், அவனது கீதம் கேட்டுத் தேரும், வாளும் தந்தீர். அன்று, வீழிமிழலையில். அடியவர்கள் வருத்தந்தீர, அருந்திடத், திருஞான சம்பந்தமூர்த்திக்கும், திருநாவுக்கரசருக்கும் நாள்தோறும் பொற்காசுகளைத் தந்தருளினீர்! இன்று எனக்கும் அருள்வீராக.

மாற்றமே லொன்றுரையீர் வாளாநீ ரிருந்தீர்
    வாழ்விப்ப னெனவாண்டீர் வழியடியே னுமக்கு
ஆற்றவேற் றிருவுடையீர் நல்கூர்ந்தீ ரல்லீர்
    அணியாரூர் புகப்பெய்த வருநிதிய மதனில்

தோற்றமிகு முக்கூறி லொருகூறு வேண்டுந்
தாரீரே லொருபொழுது மடியெடுக்க லொட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 8

8. காரோணத்துக் கடற்கரையின் உகந்தருளும் பெருமானே! வாழ்விப்பன் என்று என்னை ஆட்கொண்டீர். செல்வமெலாம் மிக்குடையீர்! விடையொன்றும் சொல்லாது வாளா இருந்தீர்! அடியேன், வழிவழி அடிமை, ஆரூரில் புகப்பெய்த நிதிக்குவைகளில் மூன்றில் ஒன்றும் ஏறிச்செல்வதற்குக் காற்றொத்த விரைவுடைய குதிரையும் தருவீராக. தாரீரேல் ஒருபோதும் அடியெடுக்க விடேன்.

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே யாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியான்
எம்பெருமா னிதுதகவோ வியம்பியருள் செய்யீர்
திண்ணெனவென் னுடல்விருத்தி தாரீரே யாகிற்
றிருமேனி வருந்தவே வளைக்கின்றே னாளைக்
கண்ணறையன் கொடும்பாட னென்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 9

9. காரோணம் மேவியிருந்த பெருமானே! உலகங்கள் அனைத்தையும் ஆட்சியாகக் கொண்டுடையீர் அருகுறையும் மலைமகள், அறுமுகச்சிறுவனையும் நினையேன், எண்ணிலாது உண்கின்ற கணபதி ஒன்றறியான். இது தகைமையோ? அருள்வீராக எனக்கு உடல் விருத்தி தாரீரேயாகில் மேனிவருந்த வளைக்கின்றேன், கண்ணறையன், கொடும் பாடன் என்று நாளைசொல்வதிற் பயனில்லை. இப்போதே அருள்வீராக. கண்ணறையன்-தயவிலாதவன். கொடும்பாடன் - கொடுமைபுரிபவன்.

மறியேறு கரதலத்தீர் மாதிமையே லுடையீர்
மாநிதியந் தருவனென்று வல்லீரா யாண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீ ரடிகேள்
கிறியும்மாற் படுவேனே திருவாணை யுண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே. 10

**10.** காரோணம் மேவியிருந்த எமது பெருமானே! கீழ்வேளூரையும் இடம் கொண்டீர். மான் கொண்ட கையீர். அழகுடையீர். மாநிதியந்தருவமென்று வலியவந்து ஆண்டீர். உம்மால் பழிப்பிற்கு இடமாவேனே? சுரிகையும் பட்டிகையும் தருவதோடு மூன்றுபோதும் கறிகளொடு நெய்கலந்த சோற்றுணவும் தந்தருள வேண்டும். சுரிகை - கத்தி. பட்டிகை - பட்டு.

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கு மெனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்
உண்மயத்த வுமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரென்
றண்மயத்தா லணிநாவ லாரூரன் சொன்ன
அருந்தமிழ்க ளிவைவல்லா ரமருலகாள் பவரே. 11

**11.** பரவையொடு, சங்கிலி, அடியேற்கும் பற்றாய பெருமானே! பற்றாகமற்று யாரையும் இல்லேன். குறை தீர்த்து, ஆடை, ஆபரணங்களும், கத்தூரியொடு சாந்தமும் அருளவேண்டும். காரோணத்து மேவிய பெருமானே என்று ஆரூரன் சொல்லிப்போற்றிய அருந்தமிழ் இதனைப் பாடிட வல்லார்; அமருலகாள்வர்.

திருச்சிற்றம்பலம்.

## திருவாசகம்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

பத்தியா யுணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறமுத மொத்தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவாபாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகொலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதிவிடங்கராய்
நடம் குலாவினரே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகு திருவாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி ஆளாய்
மணம் செய்குடிப் பிறந்த
பழஅடியா ரொடும் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே,

## பெரியபுராணம்

நம்பிதாமும் அந்நாட்போய் நாகைக்காரோ ணம்பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடைசாந்தம்
அடற்பரிமா
பைம்பொற்சுரிகை முதலான பெற்றுமற்றும் பலபதியில்
தம்பிரானைப் பணிந்தேத்தித் திருவாரூரிற் சார்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

3/2
813
4-47

உ

குருபாதம்

பண்ணிசைப் பதிவுத்தட்டுப்

# பாராயணத் திருமுறைப் பாடல்கள்

---

வெளியீடு; தருமபுர ஆதீனம்.

பாடியவர் :

ஆதீன இசைப்புலவர், இசையரசு,

திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள்

தயாரிப்பு:

The Gramaphone Company Ltd., Madras

---

இப்பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகள், பத்து அடங்கியது.

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40–10—0 |
| பாக்கிங் செலவு | ரூ. | 2—0—0 |
| போஸ்டுமூலம் அனுப்ப தபாற்செலவு | ரூ. | 4—8—0 |

வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிடைக்குமிடம் :—

காஷியர்,

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி,

தஞ்சை ஜில்லா.